ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, — ,, | 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ளு ஆடி-மீ 23-உ (7—8—1932) | மலர் 15.



## தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி

## மன்மத குளிகை



யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி

## குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்ப, தடிப்ப பத்து, கிரந்தி; ஆராத சுழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான சற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி. S. I.




உடனே பரீட்சை பார்க்கலாம்!

தாது புஷ்டிக்கு அதிசயமான டானிக்.

## "ரெய்ரோடைன்"

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது.

ஆறுமுக முத்திரையுள்ள மருந்துகள் மூன்று லட்சம் புட்டிகள் விலையாகி விட்டன. உண்மையான நற்சாட்சிகள் ஏராளம். மெலிந்து வாடியிருக்கிற பெண்கள் "ரெய்ரோடைன்" சாப்பிட்டால் தேக புஷ்டியும், செழிப்பும் அழகும் உண்டாகும். டாக்டர்கள் இதை பரீட்சை பார்க்கலாம்.

"ரெய்ரோடைன்" டானிக் மருந்து இரத்தசுத்தி, இரத்த விருத்தி, சதை புஷ்டி, பலம், அழகுதரும். மலச்சிக்கல், உஷ்ணவாய்வு, குன்ம வயிற்று வலி, நீர்கடுப்பு, வெள்ளை, வாய்ப்புண், மூலச்சூடு, பெண்கள் சூதக வயிற்றுவலி, சூதக்கட்டுகளைக் குணப்படுத்தும். வாத நோய்கள், மேக நீர், துர்நீர்கள், க்ஷயம், இருமல், எலும்புருக்கி நோய், கைகால் அசதி, பலவீனங்கள் முதலிய நூற்றுக்கணக்கான நோய்கள் நீங்கித் தேகக்குளிர்ச்சியும்உண்டாகும். உடம்புக்குச் சுறு சுறுப்பும், களைப்பில்லாமல் வேலை செய்யக்கூடிய சக்தியும் இந்திரியக்கட்டும், அளவு மீறிய தாதுபுஷ்டியும் உண்டாகும். உடனே பரீட்சை பார்க்கலாம். பத்தியமில்லை கெடுதி செய்யாது. வியாதி இல்லாதவர்களும் தாது பலத்திற்காக இதைச்சாப்பிடலாம்.

பூரண சுகத்திற்கு ஒரு புட்டி மருந்து போதுமானது.

80 வேளை மருந்து புட்டி 1-க்கு விலை ரூ. 5. தபால் செலவு வேறு.

தந்தி விலாசம். "சித்தர்" மதுரை.

விலாசம்:— ஆர். எஸ். பதி அன்கோ., (ரிஜிஸ்டர்)

215, மேலை மாசிவீதி, மதுரை.

Read the
"SUPERSTITION OF KHADI"
A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.
Published by Kudi Arasu Publishing House, Erode.
Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.
*Apply to:—*
Manager "Kudi Arasu" Erode.

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வறவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோறும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் ஹூ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

## இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?

உங்கள்
கண்ணையும்
காதையும்
கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

"செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "காமத்எண்ணேயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.
1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.
3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனும். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons
Pilibhit R. K. Ry., U. P.

ANANGARANGA
BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Restore youthful retaintive & erective capacity & insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual inter course. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 60 Pills Rs. 8 only. Sample Phial of 20 Pills Rs. 3 only. Please write in English To:
*SAILASRAM (K)*
*Chandanpur (Khulna)*
*E. B. R.*

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

"குடி அரசு"
கிடைக்குமிடங்கள்.

வேலூர்.
வி. டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

கரூர்.
சிங்காரவேல்பிள்ளை, ஆப்காரி கண்ட்ராக்டர்.

திருப்பூர்.
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

திண்டுக்கல்.
சிக்கந்தர்கான்சாயபு.
மலைக்கோட்டைதெரு.

காரைக்குடி.
விஸ்வநாதம், வெற்றிலைக்கடை
கல்லுக்கட்டி.

மதுரை.
வி. டி. சங்கரலிங்கம், செட்டி
யூரணி தெரு.

சேலம்.
சிவசுப்ரமணியம், வீரராகவ
செட்டி தெரு, அரிசிபாளயம்.

கொழும்பு.
சிவன் கோவில் மேற்குமட்டம்
பருத்தித்துறை.

புதுவை
திருவள்ளுவர் வாசிப்புசாலை
4 ஓர்லெயன்வீதி.
நடேசமுதலியார் சொடாபாக்டரி
ராஜவீதி.

## மெஞ்ஞான முறையும்,

# மூட நம்பிக்கையும்.

## மூடநம்பிக்கையின் கொடுமை.

"கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்சினை.

[தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(4)

இதுகாரும் மூடநம்பிக்கைகளின் ஆபாசங்களை எடுத்துக்காட்டி வந்தோம். மூடநம்பிக்கைகளுக்கு வெறுஞ் சொல் பழக்கத்தைத்தவிர வேறு ஆதாரமொன்றுமில்லை எனவும், பல திருஷ்டாந்தங்களாலும் கண்டறிந்தோம். மெஞ்ஞானமுறைப்படி மூடநம்பிக்கைகளை விசாரிக்கப்புகுந்தபின் இவைகளுக்கு ஆதாரம்வெறும் நம்பிக்கையைத் தவிர வேறு ஆதாரம் இல்லை எனவும் கண்டோம். சில மூடநம்பிக்கைகள் ஜீவனஉபாயக்கருவிகளாக இருப்பதையும் பார்த்தோம். நேற்று ஒருபுதுப்பாளையம் நிருபர், தேங்காய்களை சாமிக்காக தலைமேல் உடைத்தும், தலை உடையாமல், தேங்காய் உடைவது கடவுள் மகத்துவமல்லவா எனக்கேட்கின்றார்? இவர் தெருக்களில் நடக்கும் இதைப்போன்ற சம்பவங்களைக் கவனித்து இருப்பாராகில் இந்த கேள்விக்குதானே சமாதானம் கொடுத்துக்கொள்வார். அதைவிட்டுவிட்டு நாம்பலதடவையும் "குடி அரசு" ஏடுகளில் எந்த சம்பவமாய் இருந்தாலும் கண்ணைத் திறந்து பாருங்களென வற்புறுத்தியும் இம்மேன்மை பொருந்தியவும், வெகுசுலபமாகவுமான வழியை உபயோகித்துப்பாராமல் கிளிப்பிள்ளையைப்போல் யாரோ சொன்னதைக் கேட்டு தெய்வபக்தியால் அல்லவோ, தலை உடையவில்லை என்கின்றார்!

தெருக்களில் கரும்பு விற்கும் இடங்களில் கரும்பு உடைக்கும் பந்தயமொன்று நடந்துவருகிறது. ஒருவன் 100 கரும்பை தனது கைமேல் அடித்து உடைத்து விடுகின்றான். ஆனால் நம்மைப்போன்றவர்களோ, ஒரு கரும்பை உடைக்கப்பயப்படுகின்றார்கள். இதுவும் தெய்வீகமா? என்? அவன் உடைத்து உடைத்து பழக்கம். நீரும் நாமும் அந்த பழக்கத்தை உண்டாக்கிக்கொண்டால் அவனைப்போல் நாமும் 100 மாத்திரம் அல்ல, 200 வரை உடைத்தெறியலாம்! பழக்கம் மலையைத்தாண்டச்செய்யும்!

சிறுகுழந்தைகள் பிச்சை எடுக்க தங்களுடைய வயற்றை படீல், படீல் எனத்தங்கள் கைகளால் அறைகின்றார்கள், அம்மாதிரி நம்முடைய குழந்தைகள் அறைந்துகொண்டால் சுருண்டு கீழே விழுந்துவிடும்- இதுவும் தெய்வீகமா எனக்கேட்கின்றேன்?

நமது நிருபர் சொன்னமாதிரி செத்தவர் தலையில்கூட, தேங்காய்களை உடைக்கின்ற பழக்கம் நமது தேசத்தில் உண்டெனக்கேள்வி. எந்தவித அசங்கித காரியங்களைத்தான் நம்மூரில் செய்யமாட்டார்கள்? இவைபோன்ற அசங்கித காரியங்கள் நமது காட்டு மிராண்டித்தன்மையைக்காட்டுகின்றனவேயொழிய நமது பக்தியையோ, அல்லது தெய்வீகத்தன்மையையோ காட்டவில்லை. இவ்வித காரியங்களைக்கண்டு நாம் தலை இறங்கி வெட்கமடைவதை விட்டுவிட்டு அவை தெய்வீகமா? அல்லவா? என்று கேள்வி கேட்பது வியக்கத்தக்கதுமல்லாமல் வருந்தத்தக்கதே! இத்தியாதி மனப்பான்மையால்தான் நமது நாடு நூற்றாண்டுகளாக அடிமை வாழ்க்கையில் இருந்து வருகின்றது. இந்நிலைமையைக்குறித்து அயல் நாட்டார் நம்மைக்காட்டி பரிகாசம் செய்தால் என்ன தப்பு?

நவீன ஞானப்படி இத்தியாதி மூடநம்பிக்கைகளை விசாரித்து விளக்கியுள்ள நூல்கள் ஆங்கிலத்தில் பலவுள. அவைகளில் முக்கியமானவை [("Taylors Anthropology") என்றும் ("Frazors Golden Bough") என்றும் இரண்டு பிரபல்ய நூல்கள் உள. அவைகளை தமிழ் மொழி பெயர்த்து எழுத வேண்டிய அவசியத்தை நமது சுயமரியாதையோராகிலும், அல்லது சமதர்மிகளாகிலும், அறிந்து நடக்க வேண்டும். பாமர மக்கள் மூடநம்பிக்கைகளை ஒழிக்கவேண்டில் அம்மூடநம்பிக்கைகளின் ஆதாரத்தை விசாரித்து அறிதல்வேண்டும் அவ்வித விசாரணைக்கு மேற் போந்த நூல்கள் இன்றியமையாததாகும். இத்தியாதி நவீன ஞானத்தைப்பாமர மக்களுக்குப் புகட்ட எத்தனிக்கையில் புராணங்களையும், கேவல நாடகங்களையும், அருட்பாக்களையும்பற்றி அச்சிடுவதால் பயன் என்ன? மெஞ்ஞான முறைப்படி சிற்சில மூடப் பழக்கங்களை ஈங்கு எடுத்துரைப்பாம். நமது தமிழ் நாட்டில் மிகுதியாக பாமர மக்களிடத்து ஒரு மூட பழக்கம் அனுதினமும் பார்க்கின்றோம். அதுயாதெனில் இறந்தவர்களை சுடலைக்குக்கொண்டு போகும் போது அதிக சத்தத்தோடு கொண்டு போகும் பழக்கம் இதனுடைய ஆதாரத்தைக்கண்டு கொள்ளாமல் இதை பெரும் பழக்கமாக தென்னாட்டில் நடந்தேறி வருகிறது. இதுவிசேஷமாக தாழ்த்தப்பட்டோர் எனக் கூறும் வகுப்பாரிடம் காணலாம். உயர் குலத்தோர் என்று கூறும் பிராமண வைசியர்களில் சாவு மேளத்தைக்கேட்பதரிது. ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாகரிக நாடுகளில் சேனைத்தலைவர்களுக்குத்தவிர மற்றவர்கள் சாவுக்கு மேளம் அடிப்பதில்லை. ஆனால் இந்த பழக்கம் காட்டுமிராண்டிகளிடம் (Savage Tribes] அதிகமாகக் காணலாம் இந்த பழக்கத்தின் காரணத்தை அறியவேண்டுமானால் காட்டுமிராண்டிகள் எண்ணியுள்ள எண்ணத்தை விசாரித்தால் தெரியவரும். அவர்களுக்குள் இறந்தவனைப்பற்றி இரண்டு மூடநம்பிக்கைகள் உண்டு. அவையாவன:— அவர்களில் இறந்த மனிதனுடைய உயிர், ஆவி, (Spirit, Soul) உடலைவிட்டு நீங்கியதும் அருகாமையிலுள்ள செடியிலோ, விருட்சத்திலோ, ஜலத்திலோ ஒழித்துநிற்குமாம்! அந்த "ஆன்மா" உயிருடன் இருப்பவர்களை தொந்திரவு செய்யுமாம்!! ஆதலின் அதனை சத்தமிட்டு விரட்டி துறத்த வேண்டுவதற்கு சத்தமிட்டும், இரைச்சலிட்டும், கூச்சல் போட்டும், வாத்தியங்களால் பேரொலியை உண்டாக்கி ஆன்மாவை பயப்படச்செய்து ஓடச்செய்வதற்கு ஏற்பட்ட தப்பட்டை, பேரி, சங்கு முதலிய வாத்தியங்கள் முழங்கச்செய்யும் பழக்கத்தின் காரணமாகும். இரைச்சல் அதிகமிட, அதிகமிட இறந்தவன் 'ஆன்மா' அதிக விரைவாக ஓடிவிடுமாம்! இந்த காட்டு மிராண்டி மூடபழக்கத்தை நமது தமிழ் மக்களும் அனுசரித்து வருகின்றார்கள். நமது நாடுகளில் சாவு மேளங்களின் காரணம் ஆதிகால காட்டுமிராண்டிகளாய் இருந்து வந்த நமது மூதாதைகளின் உத்தேசங்களென அறியவும். சாவு மேளங்களுக்கு ஆதாரம் காட்டுமிராண்டி பழக்கமாக இருக்க இதற்கு தற்காலம் வேறுவித அர்த்தங்களும், வியாக்கியானங்களும் கொடுக்கின்றார்கள். அரசர் இறந்தாலும் சேனைத்தலைவர் இறந்தாலும் சாவுமேளம் அதிகமாக உபயோகிக்கின்றார்கள். நமது நாட்டில் எளியவன் இறந்தால் ஒன்றிரண்டு சங்குடன் போகின்றது. அரசர்கள், தனவந்தர்கள் இறந்தால் ஊரிலுள்ள வாத்தியங்கள் எல்லாம் முழங்கும்! என்? எளியவன் 'ஆன்மா' எளிதில் துறத்தப்படுமாம்! ஆனால் தனவந்தனுடைய 'ஆன்மாவோ' பலத்த சத்தத்தால்தான் ஓட்ட முடியுமாம்!! இந்த எண்ணங்கள்தான் சாவு மேளங்களுக்கு அடிப்படையாகவுள்ளன. இறந்தவனைவாத்திய கோஷ்டியாலும் மரியாதை செய்வதென்பது. பிறகு கொடுத்துவரும் வியாக்கியானமென அறிக. எதார்த்தமோ செத்தவன் 'உயிர்' திரும்பவும் வரவொட்டாமல் செய்வதற்கு ஏற்பட்ட மேளவாத்தியங்களென அறிக. காட்டுமிராண்டி பழக்கங்களில் சிலவற்றை இன்னும் உயர் மக்கள் என்று கூறும் பிராமணர்களிடமும் காணலாம். பிராமணர்களிடம் ஒரு தூர்ப்பழக்கம் இருந்து வருகின்றது. அதாவது இறந்தவனை சாதாரண வாசல் வழியாகக் கொண்டு போகாமல் சுவற்றில துவாரம் செய்து, சவத்தை அவ்வழியாக எடுத்துக்கொண்டு போன பிறகு, அந்த துவாரத்தை அடைத்து விடுவார்கள். இதுவும் காட்டு மிராண்டி பழக்கங்களில் ஒன்று, இந்தப் பழக்கத்திற்கு காட்டுமிராண்டிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் பழய வழியாக போனவன் இறந்தால், அவன் "ஆன்மா" அந்த வழியே திரும்பவந்து விடுமாம்! புதிய துவாரத்தின் வழியாக எடுத்துவிட்டு, அந்த துவாரத்தை அடைத்துவிட்டால். அந்த "ஆன்மா"வுக்குப் புதுவழி தெரியாமையால் அது அந்த புது வழியில் நுழையாமல் தடுத்து விடப்படுமாம்! செத்தவன் ஆன்மாவை ஏமாரச் செய்யும்சூட்சிகளில் இது ஒன்று. இன்னும் பல மூட சூட்சிகளைக்கொண்டு "ஆன்மாவை" மயக்கச் செய்து விடுகின்றார்கள். இறந்தவனை வீட்டை விட்டு சுடுகாட்டுக்குக் கொண்டு போகையில் சாணிச்சட்டியை உடைக்கின்றார்கள். இதுவும் காட்டு மிராண்டிகளின் மூடப் பழக்கத்தை அனுசரித்து நடப்பதாகும். காட்டுமிராண்டிகளுக்குள் ஒரு கற்பனையுண்டு. அதாவது, பேய், பிசாசுகள் தண்ணீரைத்தாண்டாவாம்! தண்ணீரில், இன்னும் சாணித்தண்ணீர் விசேஷம், சவத்தின்பின் ஊத்தினால், அதன் ஆன்மா, தெளித்த தண்ணீரைத்தாண்டா என்று எண்ணி, இந்தப் பழக்கம் நாளைக்கும் நம்மவர் செய்து வருகின்றனர். கொள்ளி வைத்தவர்களை, சுடுகாட்டை விட்டு, வீட்டுக்குத் திரும்பும்போது, கடலிலாகிலும், குளத்திலாகிலும், ஆற்றிலாகிலும், நீரில் காலை நனைக்கவேண்டுமென்ற பழக்கம். இதனால் ஏற்பட்டதென அறியவும். இவர்கள் காலடி தண்ணீரில் மறைந்து போகுமாதலால் செத்தவன் "ஆன்மாவும்" காலடி வைத்தபின் தொடர்வதற்கில்லையாம்! திருடர்களும், தங்கள் காலடிகளை தண்ணீரில் இறங்கி மறைத்து விடுவதைப் போதுமென அறிக. பின் தொடர்ந்த நாய்கள். அங்கு வந்து மயங்குவதைப்போல், "ஆன்மாவும்" மயங்கிவிடுமாம்! கொள்ளி வைத்தவர்கள், எரியும் சவத்

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

# மதம் செய்யும் கேடும் மக்கள் படும் பாடும்!

(திருமங்கலம் — மணிமாறன்)

மதம் மக்களை எந்நிலையில் கொண்டுவந்து சேர்த்துவிட்டது என்பதற்கு பம்பாய் நகரத்தில் சில தினங்கள் முன் நடந்த சம்பவங்களே தக்க சான்றாக விளங்கிற்று. மதச்சண்டையின் காரணத்தாலே தான் பம்பாய் நகரம் பிணக்காடாய், கொலைக்களமாய், விளங்குகிறது. தேசீயகாங்கிரசிற்கு செல்வாக்குள்ளதும், காங்கிரஸ்கிளர்ச்சிக்குத்தலை நகராக விளங்குவதும், அதாவது தெளிவாகச் சொல்வதனால் 'அஹிம்சை' அஹிம்சை' என சதாஜெபித்துக் கொண்டிருக்கும் "அஹிம்சைவீரர்" திரு காந்தியாருக்குச்செல்வாக்குள்ள இடத்திலேயே "ஹிம்சை"யானது இவ்வளவு தீவிரமாக நடைபெற்றால் இந்த பதங்களின் கொடூரத் தன்மையை என்னென்றெழுதுவது?

மதங்கள் முன்காலத்திய மக்களால், மனிதசமூகத்திற்காக உண்டாக்கப்பட்டதென்பதே அறிவாளிகள், ஆராய்ச்சியாளர்கள் கண்ட உண்மையாகும். மதங்கள் தெய்வங்களால் உண்டாக்கப்பட்டதென்றும், அவதார புருஷர்களால் வகுக்கப்பட்டதென்றும், மதங்களுக்கு தெய்வீகம் கற்பிப்பதும், அதை நம்புவதும் அறியாத, பேதைகளின் செயலே யாகும். முன்காலத்து நிலைக்கொப்ப முன்காலத்து மக்களால் கொள்கைகள் வகுக்கப்பட்டதே போல், இக்கால மக்களால் இக்காலத்திற்கொப்ப கொள்கைகள் (மதம்) வகுக்கப்படவேண்டியதே முறையல்லாது, பழைய பழக்கவழக்கங்களையே அநுசரிப்பது அறிவீனர் செயலென்பது மறுக்கமுடியாத உண்மை. "பயைனகழிதலும், புதியன புகுதலும்" என்பது முன்னோர்கள் சொன்னவைகளேயாம்.

எனவே பழைய காலத்து மதங்களின் (கொள்கை) படியே இப்போதும் நடக்கவேண்டுமென்பது முறையன்று. அப்பழையகால முறைப்படியேயாரும் நடப்பதுமில்லை. ஆனால் தங்கள் தங்கள் மதத்தைக்காக்க உயிரையும் கொடுக்றார்களே தவிர அம்மதக்கட்டளைப்படி ஒரு இம்மியும் நடப்பதுமட்டுமில்லை.

இந்துமதத்திலோ, மகமதிய கிறிஸ்துவ, பௌத்த மற்ற எம்மதத்திலோ உள்ளவரில் ஒருவராவது அம்மதக் கோட்பாட்டின்படி நடக்கிறார்களா என்று அலசிப்பார்த்தால் பழைய சட்டப்படி (மதப்படி) யாரும்நடப்பதில்லை உலகமாறுதலின்வேகம் எல்லா மதஸ்தரையும் பேதம் பாராது தன் வயப்படுத்திவிட்டது. சகலமதஸ்தர்களும தங்கள் தங்கள் மதக்கட்டளையை மறந்து "கிறாப்" நாகரீகம், "யூனிபாரம்" (Uniform) முதலியவைகளில் மாட்டிக் கொண்டனர். மதத்தை விடாப்பிடியாக பிடித்துக் கொண்டிருந்தவர்களும், மதகுருக்களும், முல்லாக்கள், போப்புகள், ஆச்சாரிகள், முனீஸ்பரர் (பிச்சைக்காரர்) கள் யாவரும் உலகமுற்போக்கில் சிக்கி இக்கால நாகரீகத்திற்குகந்தாற்போல, உண்டி, உடை, நடை முறைகளை மாற்றிக்கொண்டனர். இப்படியாகபல மதஸ்தர்களும் தங்கள் தங்கள் மதக்கட்டளைப்படி நடக்க முடியாமல், உலகப் பொது விதியில் செல்லும் போது, இன்னும் பழையகாலத்துச் செத்துப்போன மதத்திற்காகச் சண்டையிடுவதென்றால் அந்தோ! இந்தியாவே! இன்னும் பாழும் அறிவீனப் படுகுழிவிட்டு நீ எழவில்லை என்றே தெரிகிறது! இந்தவள்ளலில் சிலர் "பூரணசுயேச்சை" "பரிபூரண சுயராஜ்யம்" என்று வாய்கூசாது செப்பித்திரிகின்றனர்!

இந்து மதத்தை எடுத்துக்கொண்டாலோ இதற்கு ஆதியில்லை, அந்தமில்லை, கொள்கையுமில்லை, எல்லாம் மதமே. மனிதன் மூச்சுவிட ஆரம்பிப்பதுமுதல் கடைசி மூச்சுவிடும்பரியந்தம் நடக்கும் யாவும் மதத்தின் பேராலேயே நடை பெறும். விபசாரம் செய்யவும் மத ஆதாரமுண்டு. விபசாரத்தடைக்கும் மதஆதாரமுண்டு. கள் குடிக்கவும் மதம் அனுமதிக்கும். கள் குடி தீது எனவும் மதம் போதிக்கும். ஒரே கடவுள் உண்டு என்பதும் இந்து மதமே, பல கடவுள் வணக்கமும் இந்துமத ஆசாரமே. இத்தியாதி முரண்பட்ட காரியாதிகள் பல இந்துமதத்தின் பேரால் நடை பெறும். இதை ஏன் என்று கேட்பாரில்லை, எடுத்துப் பேசுவாருமில்லை. ஆகவே இந்துமதத்தின் பேரால் ஒருவன் எத்தனை அக்கிரமம், பாதகம், அட்டூழியம் செய்யினும் கேட்பதற்கு நாதியில்லை, எனவே இந்து மதமானது கட்டுக்குச்சேராதகுப்பை என்றே தள்ள வேண்டும்.

கிறிஸ்து மதத்தை எடுத்துக்கொண்டாலோ அதன்படி அம்மதஸ்தரே நடப்பதைக் காணோம். 'ஒரு கன்னத்திலடித்தால் மறுகன்னத்தையும் திருப்பிகாட்டு' என்றுபோதிக்கிறது கிறிஸ்துமதம். ஆனால் அம்மதஸ்தர் பீரங்கி வெடிகுண்டு, விஷப்புகைவெடி முதலிய 'மனிதக்கொல்லி'களைக்கண்டு பிடிக்க முனைந்து நிற்கின்றனர். வேறு என்ன சொல்வது: அவர்களின் மதக்கட்டளையும் அவர்கள் கோவிலினுள்ளேயே (Church) அடங்கிவிட்டது.'

மகமதியர்களை எடுத்துக்கொண்டாலும் அவர்களும் அவர்களின் மதக்கட்டளைகளைக் கடைப் பிடிக்காது நின்றுவிட்டனர். உலக நாகரீகம் அவர்கள் தலையில் மயிர் வளரும்படி செய்துவிட்டது. இடை, வெள்ளை வஸ்திரம் தரித்து விட்டது, தாடி மறைந்து விட்டது! இத்தியாதி பல மாறுதல் உண்டி, உடை, நடை, யாவற்றிலும் உண்டாகிவிட்டது. மற்ற மதஸ்தர்களும் இது போன்றே தங்கள் ஆதிமதக்கட்டளைகளை மறந்து உலகப்பொது. விதியில் வீழ்ந்து, சகல மதஸ்தரும் ஒரு சட்டவரம்பில் நிற்கும் காலம் வந்து விட்டது! பழைய மத ஆசாரங்கள் மூலை தேடி ஓடின. மதக்கிரந்தங்கள் புத்தகசாலையோடு நின்றது. ஆனால் மதத்தின் பேரால் காரணமில்லாத கலகங்கள் மட்டும் கிளம்பிப்பலர் மாளுகின்றனர். என்றால், இந்தியா இன்னும் முன்னேற்ற மடையவில்லை என்பதற்கு வேறு அத்தாக்ஷியும் வேண்டுமோ?

இப்படியாக மதச்சண்டைகள் பல எழுதற்கு மதத்திற்கு தெய்வீகம் கற்பிக்கப்பட்டதே காரணமாகும். கடவுளே மதத்தை உண்டாக்கியவரென்றும், அம்மதத்தை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்றும் மக்கள் மூடபக்தி (Ignorant faith) கொண்டிருப்பதினால் தான் மதச் சண்டைகள் பல எழுகின்றன! பல வித இன்னல்களால் பலகோடி ஜீவப்பிராணிகள் தினந்தோறும் மாளும் போது, ஒரு சிலபசுக்கள் கொல்லப்படும் போது மட்டும் வீராவேசம் கொள்ளும் ஒரு சாமியும், இடி முழக்கமும், வெடிமுழக்கமும் சதா முழங்கும்போது மேள சப்தத்திற்கு வெருளும் ஒரு சாமியும் நம்மைக்காப்பாற்றமுடியுமா? அத்தகைய சாமிகளால், அவைகளால் உண்டாக்கப்பட்டமதங்களால், நாம் நன்மை காணமுடியுமா? சிந்தனைசக்தியை உபயோகித்துப் பாருங்கள். இத்தியாதி கலகங்கள் இனி நடை பெறாது! சிந்தனைசக்திக் குறைவும், மூடப்பிடிவாதமும் தான் இக்கலகங்களை வலுப் பெறச்செய்கிறது!

தேசீயத்தலைவர்கள் என்றும், உலகம் போற்றும் மகாத்மாக்கள் என்றும், அறிவிற்சிரேஷ்டர்களென்று சொல்லும் தலைவர்களே, மதக்கிறுக்குக் கொண்டு மதப்பிரசாரம் செய்தால், தலைவர்களை ஆட்டுமந்தைபோல் பின்பற்றும் ஜனங்களின் மேல் குற்றம் சொல்வதெப்படி? உலக ஞானிஎனும் கிறுமபோன் பிளேட் திலகம் காந்தியவர்களே "பசுவைக் காப்பாற்றுவதே இந்து தர்மம், எதையும் தியாகம் செய்து பசுவைக்காப்பாற்று, பசுவைக்காக்கும் ஒருவனே சரியான இந்து" என்று பிரசாரம் செய்தால் இந்து முஸ்லீம் சண்டை ஏன் உண்டாகாது? முஸ்லீம் மதம் பசுக்கொலையைவிரும்புகிறது. இந்துமதம் வெறுக்கிறது. இந்துமதம் மேள வாசிப்பை விரும்புகிறது. முஸ்லீம் மதம் வெறுக்கிறது. இப்படியாக மாறுபட்ட கொள்கையுடைய மதங்களை உண்டாக்கிய "கடவுள்"களைக்குறை சொல்வதா? அல்லது இம்மதங்களை நம்பிக் கெடும் பேதைகளைக் குறை சொல்வதா? அல்லது இம்மதக்கிறுக்குக்கொண்டலையும் மகாத்மாக்களைக் குறை சொல்வதா? அல்லது இம்மதங்களை ஒழிக்காமல் வாளாவிருக்கும் அரசாங்கத்தைக் குறைசொல்வதா? அல்லது இம்மதங்களைக் காப்பாற்றி மதநடுநிலை வகிப்போம் என்று சொல்லி மதங்களுக்கு ஆயுளை நீடிக்கும் காங்கிரசைக் குறை கூறுவதா? யாரைக்குறை சொல்வது? இம்மதங்களும், இதற்காதாரமான ஜாதி, சமயம், புராண, இதிகாசப்பித்தலாட்டங்களும், தெய்வம், அவதாரம், தீர்க்கதரிசி, கடவுள்களும் யாவும் அடியோடு மறைந்து துலைந்தால் தான் மக்கள் நன்னிலையடைதல் முடியும்! இதைச்சொல்வதற்காக அவசரப்பட்டுக்கோபித்துவிடாமல், ஆற அமர உட்கார்ந்து ஆலோசித்துப் பாருங்கள் உண்மை காண்பீர்கள். நன்மையுமடையலாம்.

எனவே பழையகாலத்து மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட மதத்தை, பழைய காலத்து மக்கள் போன விடத்திற்கே அனுப்பி விட்டு, இக்காலத்திற்கேற்ற சம தர்மச்சட்டம் கடைப்பிடித்து, மக்கள் யாவரும் சரிநிகர் சமான உரிமை புடையோராய் வாழ முயற்சிப்பாம்.

---

## பிரசங்கம்.

30-7-32-ந் தேதி கோலார் தங்க வயல் மாரிகுப்பம் தென்னிந்திய பௌத்த சங்க சபா மண்டபத்தில் ஷை சங்கவித்வானும், தமிழ் ஆசிரியர் இ. நா. ஐயாகண்ணு புலவர் அவர்கள் தலைவராக அமர, திருமதி கே. சி. எழ். ஜெகதாம்பாள், திருமதி. எம். சொர்னம்மாள், திரு. எம். இராமசாமியார் திரு. பி. தனபால் முதலியோர் சொற்பொழிவாற்றினர்கள் தலைவர் முடிவுரையுடன் 9-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது என ஷை சங்க காரியதரிசி எழுதுகிறார்.

---

## சமுத்துவபோதினி.

தாழ்த்தப்பட்டவர்களின் நலத்திற்காக, இலங்கை, டிக்கோயாவிலிருந்து, சமுத்துவபோதினி, என்னும் மாதமிருமுறை பத்திரிக்கைகள், வெளியிட திருவாளர்களான, எம். கருப்பையா, ஆர். சிவம், வி. எம். பழனிவேல், வி. நயினான், முதலியவர்களால் வெளியிடப்படுவதாக அறிகிறோம். ஆகையால், தாழ்த்தப்பட்டமக்களும், "தீண்டாமை"யை, ஒளிக்கப்பாடுபடும் கனதனவான்களும் தங்கள் தங்களால் இயன்ற சந்தாதார்களை சேர்த்து உதவி புரிய வேணுமாய் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

வி. நயினான்.

# சமதர்ம முரசு.

## பொதுவுடைமையான "அழகு" எவ்வாறு தனிவுடைமையாக ஆக்கப்பட்டிருக்கிறது?

### பணக்காரத்தன்மையும், மிருக பலமும் பட்டொழிதலே நிவர்த்தி மார்க்கம்.

(தோழர் A. இரத்தினசபாபதி)

2

தோழர்கள்! "அழகும் இன்பமும்" உலக மக்கள் அனைவராலும் விரும்பப்படத்தக்க "பொது உடைமைப் பொருளெனச் சென்ற கட்டுரையில் கண்டோம். அஃதுபற்றி ஈண்டுச்சற்று விவரித்து மேற்செல்லுவோம்.

உலகில் சிறிய, அற்பமென்று கருதும் ஒன்றிலிருந்து, மிகமகத்தானதென்று கருதப்படும் ஒன்று வரையிலும், "அழகும் இன்பமுமே" வியாபித்து நிற்கின்றன. மரஞ்செடி கொடி அடர்ந்த ஒருவனத்தைப்பார்த்த போது, அதன் இயற்கை வனப்பிலீடுபட்டுள்ள மகிழாதார் யார்? பேரலைகளோடு சதா சலியாது ஓசையிட்டார்ப்பரித்து, எந்நாளும் வற்றாது பரந்து காணப்படும் சமுத்திரத்தின் இயற்கையமைப்பைக்கண்டு மகிழ் வெய்தாதார் யார்? (ஒருவருமில்லையன்றோ?) எனவ்வாறெனில், இயற்கையின் வனப்பு எல்லோரது மனதையும் தன்பால் வசீகரித்துக் கொள்ளும் சக்தியுடையதாயிருப்பதால்தான்!

அதுவே போன்று உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் தன்வாழ்நாளில் பூரண இன்பத்தைப்பெறவே முயல்கின்றான். உணவிலும், உடையிலும், அந்தஸ்திலும் அழகை உயர்வுபடுத்தி அதனால் கிடைக்கும் இன்பத்தை அனுபவிக்கவே ஒவ்வொரு மனிதனும் விரும்புகின்றான். குரூபியாகவுள்ள ஒருவன் தன்னைப்போன்று குரூபியாயுள்ள பெண்ணையே விரும்புகின்றானா? (இல்லை) தான் பார்வைக்கு அவலக்ஷணமாயிருப்பினும் மிகவும் அழகுடைய ஓர்பெண்ணை மனைவியாக அடையவே அக்குரூபி விரும்புகின்றான்! ஓர் நித்திய தரித்திரனும் தனக்கு ஓரழகிய துணைவி வேண்டுமென்று தான் விரும்புகின்றான். இவைகளைப்போலவே பலஹீனனுங்கூட அழகியபெண் மீதே ஆசைவைக்கின்றான் ஏன்? இயற்கை!

இவ்வகைகளில் இந்த குரூபியோ, ஏழையோ, பலஹீனனோ விரும்பும் பெண்மணி அம்மனிதனை மனதாரவிரும்புவாளானால், அந்தமனிதன் அவளையடையலாம், இதில் "ஆண்பெண் ஆகிய இருவரது மனமும் ஒத்திருப்பதால் அவ்விருவரும் ஒன்று சேர்க்கப்படுவதில் எவ்விதத்தடையும் இருத்தலாகாது" அத்தகைய இருவரும் ஒன்றுசேர்ந்து களிப்பதுதான் இயற்கையின் நியதி. ஆனால் இன்று நடைமுறையில் அவ்வாறிருக்கிறதா? இல்லையெனில் ஏனில்லை?

ஒருபெண்மணி அழகுமிகுந்த ஒரு ஆடவனைக்காண்கின்றாள். அவ்விருவரும் ஒருவரையொருவர் காதலிக்கின்றனர். இந்த இடத்திலும் அவ்விருவரும் ஒன்று சேர்வதிலும் எத்தகைய தகுதிவாய்ந்த ஜோடிகளின் காதல் பூர்த்தி செய்விக்கப்படுகிறதா? —இல்லையெனில், ஏனில்லை?

யௌவனமும், அழகும் வாய்ந்த ஒருபெண்மணி தன்னைப்போன்றே யௌவனமும் அழகும் பெற்றுள்ள ஓர் இளைஞனை விரும்புகின்றாள். அவ்விளைஞனும் அந்நங்கையை ஆசிக்கின்றான். அவ்வாலிபன் ஓர் ஏழையாகவோ, பலஹீனனாகவோ இருக்கிறானெனவைத்துக்கொள்ளுங்கள். அதே சமயத்தில் ஒரு பெரிய பணக்கார முதலாளியோ, அல்லது தேகபலம் மிகப்படைத்துள்ள ஓர் பலவானோ அதே நங்கையை விரும்புகின்றார்களென்றும் வைத்துக்கொள்ளுங்கள். பல இடங்களில் இவ்விதம் ஏற்படுவது சகஜம். இதில் அப்பெண்ணையடைய இயற்கைப்படி தகுதியுடையவன் இம்மூவரில் யார் என்பதை இங்கு நாம் முடிவுகட்ட வேண்டும்.

மிகப்பெரிய பணம் படைத்துள்ள முதலாளியேயாயினும் அவன் விரும்பும் அப்பெண் அவனை விரும்பாது வேறொருவனை விரும்புவதாலும், "சதிபதிகளாக வாய்க்கும் இருவரும் மனப்பூர்வமாக ஒருவரையொருவர் விரும்பினாலன்றி இல்லறம் சரிவர நடைபெறா"தாதலாலும், இந்த இயற்கையின் நியதிப்படி அப்பெண்ணையடைய அம்முதலாளி உரிமையுடையவனாகான் "கைநிறைந்த பொன்னிலும் கண்ணிறைந்தகணவனேமேல்" என்றல்லவா பெண்டிர் கருதுவார்கள்.

அடுத்தபடியாக தேகபலம் படைத்த அம்மனிதன் அம்மங்கையையடைய உரிமையுடையவனாவானோவெனில் "அவனுமில்லை" யென்றே விடைபெறுவோம். ஏனெனில் முன்கூறிய முதலாளியைப்போலவே இப்பலசாலியும் அவன் விரும்பும் நங்கையால் விரும்பப்படவில்லை. காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதன்றோ இன்பம்? இங்கு இருவரில் ஒருவராகிய பெண்மணியின் கருத்து, அப்பலவானின் கருத்துடன் ஒத்தில்லாமையால் அவனும் அப்பெண்ணையடைய இயற்கை நியதி இடங்கொடுக்கவில்லை!

மூன்றாவதாக உள்ள வாலிபன் முதலில் கூறப்பட்ட முதலாளி போன்று பணம் படைத்தவனில்லாவிடினும், பின்னால் கூறப்பட்ட பலவானைப்போன்று உடல் உரம் பெற்றவனுமல்லாவிடினும் அவனே அவன் விரும்பும் பெண்ணையடைய உரிமையுடையவனாவான். ஏன்? அவன் விரும்பும் அப்பெண்மணியும் அவனை மனப்பூர்த்தியாக விரும்புவதால்தான். முதலாளியினது செல்வமும், பலவானது தேகவலிமையும் இந்நங்கையின் மனதைத் தம்வசப்படுத்துவனவாயில்லை! அஃதேபோன்று அவள் விரும்பிய அவ்விளைஞனின் எளிமையும், பலமின்மையும் அந்நங்கையின் மனதில் வெறுப்பையுண்டாக்குவனவாயில்லை! இங்குதான் இயற்கையின்தோற்றம் நன்கு காணப்படுகிறது.

இவ்வாராய்ச்சியின்படி அந்நங்கையை விரும்பிய மூவரில் அவள் விரும்பிய அவ்விளைஞனே அப்பெண்ணையடைய உரிமையுடையவனெனக்கண்டோம். அவர்கள் ஒன்றுசேர்ந்து இன்பம் அனுபவிப்பதே நியாயம். ஆனால் முதலில் அப்பெண்ணைக்காதலித்த முதலாளி பெரும் பணம் படைத்தவனாதலின் அந்நங்கையின் கருத்திற்கு விரோதமாகவே எவ்வாற்றானும் அவளையடைய விரும்புகின்றான். எதனால்? அவனது பணத்திமிரினால். எனவே அவன்தன் விருப்பப்படி பணப்பையைத் தாராளமாகத்திறந்து காலிகளுக்குக் கைக்கூலிகொடுத்து அவர்களைக்கொண்டு பலவந்தமாக அப்பெண்மணியை கொண்டுவரச்செய்கிறான்; அப்படியே நடக்கவும் நடக்கிறது. தன்னந்தனியளாய் அக்கொடியவன்கையிலகப்பட்டு, எவ்வித தேகபலமுமின்றி, தற்காப்புக்கேனும் எவ்வித ஆயுதமும் வைத்துக்கொள்ள உரிமையற்றிருக்கும், ஓரிளம்பெண் அச்சமயம் எவ்வாறு தன்னை அங்கிருந்து மீட்டுக்கொள்ள முடியும்? வேறு சில இடங்களில் பணப்பைத்தியம் பிடித்து, பணத்திற்காகப்பெண்ணை விற்கும் அறிவிலிகளும் தண்டிக்கப் படத்தக்கவர்களுமான பெற்றோர்களும் நம் நாட்டிலில்லாமலில்லை. (எத்தனையோபேர் இருக்கிறார்கள்.) அதன்பின் அம்முதலாளிகளுக்கென்ன குறைவு? எனவே இவ்விருவகையாலும் காலிகளுக்குப்பணந்தந்து யாருமறியாதபடி பெண்ணை பலாத்காரமாகக்கொணர்ந்தோ, அல்லது இந்த மௌட்டீகப் பெற்றோருக்குப் பணங்கொடுத்தோ, தன்னைச்சற்றும் விரும்பாத அப்பெண்ணை இப்பணக்காரன் அடைதல் கூடியதாயிருக்கிறது.

அடுத்தபடியாக, பலவான் விஷயத்தை எடுத்துக்கொண்டால், அவனும் அப்பெண்ணை அவளது விருப்பத்திற்கு மாறாகவே அடையும் வழியுடையவனாயிருக்கிறான். முதலாளியைப்போல் கைக்கூலிகொடுத்து ஆள்சேர்க்க வேண்டிய அவசியம்இவனுக்கில்லை. இவன் பலசாலியாதலின் மற்றும் பலவான்களான பலர் இவனுக்கு நட்பினராயிருப்பர், அவர்களைக்கொண்டுதான் காரியத்தை முடித்துக்கொள்கிறான். அல்லது தான் பலவானாதலால் பிறரது உதவியின்றியே, தான் விரும்பும் அம்மங்கையை பலாத்கரித்துத்தன் இச்சையைநிறைவேற்றிக்கொள்கிறான். இம்மாதிரிச் சம்பவங்களை நாம் எத்தனையோ இடங்களில் பிரத்தியக்ஷமாகக்காண்கின்றோம்.

இந்த இடத்தில் "பெண்களும் போதிய தேகபலம் பெற்றவர்களாயிருப்பார்களாயின்" ஆடவர்கள் அவர்களை அவ்வளவு எளிதில் பலாத்காரம் செய்ய இயலுமா என்பதை அன்பர்கள் சிந்திக்க வேண்டுகிறோம். "பெண்களுக்கு இயற்கையில் பலமே உண்டாக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களுக்கு மனோபலத்தையும், தேகபலத்தையும் கடவுள்கொடுக்கவில்லை" என்னும் வைதீகர்கள் கூற்றுபொருளற்றதேயாகும். இத்தகைய அறிவாளிகள் இன்றைய ருஷியா, இட்டாலி தேசங்களை போய்ப்பார்ப்பார்களாயின் அங்கு காணப்படும் பெண்டிர் சமுதாயத்தின் நடக்கைகளைப்பற்றி என்ன கூறுவார்களோ அது அவர்களுக்கே வெளிச்சம்!

அவ்விரு நாடுகளிலும், பெண்கள் ஆண்மக்களோடு சமத்துவமாய் இராணுவம் உள்ளிட்ட எல்லா வேலைகளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். "கடவுளின் அமைப்பு பெண்களுக்கு பலமில்லாமல் செய்திருக்கிறது" எனப் பொக்கம் பேசுவோர், "ருஷியா" "இட்டாலி" தேசத்துப் பெண்களுக்கு எந்த கடவுள் தேகவல்லமையை கொடுத்தாரென்பதற்கு பதில் கூறவேண்டும். இளம்வயதுடைய "ஆமிஜான்சன்" என்னும் பெண்மணி, தன்னந்தனியாய் "ஐரோப்பா"விலிருந்து "ஆஸ்டிரேலியா"வுக்கு ஒரே பாய்ச்சலில் பறந்து சென்று புகழ் பெற்றாரென்று பத்திரிகைகளில் படிக்கிறோம். ஓர் சைனதேசப்பெண்மணி, சமீப சீன—ஜப்பானியப்போரின்போது பெருஞ்சேனை யொன்றைத்தலைமைவகித்து நடத்தியதொடு, ஆகாயவிமானத்தில் சென்று ஜப்பானிய ஆகாயவிமானிகளை எதிர்த்து அவர்களால் "ஆகாயப் பேய்" எனவியந்து கூறப்பட்டு, இத்தகைய செயல்களால் தனது தாய்

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

# குடியைக்கெடுக்க வந்ததாம்! "குடி அரசு"!!

[யானை வெடி]

அடா அப்பா! போதும், போதும். கேட்டது போதும். என்ன கேட்டது போதும்? சப்தம். சப்தம். என்ன சப்தம்? வைதீகர்களுடைய சப்தம். எதைப்பற்றி? குடி அரசைப்பற்றித்தான். அண்ணமார்களே! கேளுங்கள் கதையை. என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? மொத்தமாகச் சொல்லுகிறார்கள். குடியைக் கெடுக்கவந்ததாம் "குடி அரசு". என்ன பாருங்கள். நாம் நம்முடைய சீர்திருத்தப்பாதையை, சமத்துவப்பாதையை, சுதந்திரப்பாதையை சீர்பண்ணிக்கொண்டு போகையில் இதுமாதிரியான வைதீகர்களுடைய வாய்ச்சண்டை, எழுத்துச்சண்டை, பேப்பர் சண்டை, கேள்விச்சண்டை, சந்தேகச்சண்டை, அறியாமையால் உண்டாகும் அறிவு கெட்டவர்கள் சண்டையாகிய இவ்வளவு சண்டைகளுக்கும் பதில் சொல்லி மேலே நம் பிரயாணத்தை நடத்தவேண்டியவர்களாக இருக்கின்றோம். நம்மைக் காரணமின்றி தூற்றுபவர்களைக் காரணம் கேட்கின்றோம். இதன் மத்தியில் பார்ப்பனர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? நம் பாமரமக்களிடம் நம் பிரயாணத்தைப்பற்றி கெட்ட அபிப்பிராயம் படும்படி ஓதுகிறார்கள். அவர்களும், இவர்களும் எல்லாருமாகச் சேர்ந்துகொண்டு குடிகெடுக்கவந்தது "குடி அரசு" என்று புலம்புகிறார்கள். ஒரு நோயாளியை டாக்டரிடம் கொண்டு காண்பித்து சிகிச்சை செய்ய வேண்டுமென்கிறோம், ஏன் அதுமாதிரி டாக்டரைத் தேடுகிறோம். நோயாளி குணமடையட்டும்என்பதற்குத்தான், டாக்டரும் பெரிய சிரங்காக இருக்கிறது என்று சொல்லி கத்திய எடுத்து ஆப்பரேஷன் செய்கிறார். ஆனால் நோயாளி என்ன சொல்லுகிறான்? அடே பயல்களா! என்னைக்கொல்லவா பார்க்கிறீர்கள்? என் குடியைக் கெடுக்கவா பார்க்கிறீர்கள்? என்று ஐயோ! அப்பா!! என்று கத்துகிறான். சிகிச்சையினுடைய அருமை—பிரயோசனம்—நன்மையைக் கைக்கொள்ளாமல் இதுமாதிரிக் கத்துகிறான் என்று டாக்டர் உள்பட எல்லோரும் சிரிக்கிறோம். அது மாதிரி இயக்கத்தலைவராம் ஈ. வெ. இராமசாமியாகிய டாக்டர், "குடி அரசு" என்னும் சீசாவில் பலகம் பவுண்டர்கள் அனுப்பிய கட்டுரைகளாகிய மருந்துகளை கலந்து, ஒவ்வொரு வாரமும் வெளியிடுகிறார். அறியாமை, தலைவிதி, கர்மம், கடவுள் செயல், மதம், மறுஜென்மம், என்பனபோன்ற வார்த்தைகளால் பீடிக்கப்பட்ட மக்கள், அதை வாங்கி மனப்பாடம் செய்து தங்கள் அறியாமையையும் போக்கி, எவைகளாயிருந்தபோதிலும், யார் சொன்னதாகச் சொல்லியிருந்தபோதிலும், சிந்தித்துப்பார்க்கும் சிறந்த வேலையைக்கைக்கொண்டு, அச்சொற்களுக்கு யார், யார், எவை எவை அடிப்படையான காரண பூதங்களாக இருக்கின்றனவோ அவர்களையும், அவைகளையும், தாக்க ஆரம்பித்தவுடன், சூட்சிக்குக் காரணஸ்தர்கள் மக்கள் விழித்துக் கொண்டதை தெரிந்துகொண்டாலும், சும்மாயிருந்தால் தங்களுடைய அந்தரங்க ஆதிக்கம் கூடிய சீக்கிரம் குறைந்துவிடுமோ எனப் பயந்து சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி கெட்ட அபிப்பிராயப்படும்படி குடியைக் கெடுக்க வந்தது "குடி அரசு" எனக் கத்துகிறார்கள், படபடவெனப் பல்லைக்கடிக்கிறார்கள்.

மற்றும் போதாக்குறைக்குத் தலைவர் ஈரோட்டு ராமனும் தன்னுடைய மருந்துகள் இன்னின்ன வியாதியைத்தீர்க்குமென்றும் பிரசாரகர்களும், நம் அருமைச் சிநேகிதர்களுமாகிய கம்பவுண்டர்கள் "குடி அரசு" என்னும் சீசாவில் உள்ள கட்டுரைகளாகிய மருந்துகள் இன்னின்ன வியாதிகளைத் தீர்க்குமென்றும் பிரசாரம் செய்து அநேக மக்களின் அறியாமையை நீக்கியும் வருவதுடன் "குடி அரசு" என்னும் சீசாவை வாங்கி அதிலுள்ள மருந்துகளையும் உங்கள் புத்திக்கு இரையாகக்கொடுங்கள் என்றும் போதிக்கிறார்கள். இந்த நிலையில் பார்ப்பனர்களைப்பற்றி அவர்களுடைய சூட்சிச் சூத்திரங்களைப் பற்றி பேசுமிடத்து என்னமோ அவர்களுக்குப் பங்காளிகளைப் போல் பல்குவீதம் கூட சொல்லாமல், நம் பாமர மக்கள், பல்லைக்கடிக்கிறார்கள். பார்ப்பனர்கள் நம்மை எவ்வெவ்வழியில் ஏமாற்றுகிறார்கள் என்று அறியாமலும், வேசி மகன், கூலி வேலை செய்பவன், அடிமை, புத்தியில்லாதவன் என்ற பதங்களுக்குக் காரணமான "சூத்திரன்" பட்டத்தை அறியாமலும், பாசாங்கு போடுபவர்கள் பலர், பயமுறுத்துபவர்கள் சிலர்.

மதத்திலும், மறுஜென்மத்திலும், மடாதிபதிகளிடத்திலும், மகந்துக்களிடத்திலும், மடிசஞ்சிகளிடத்திலும், மகாத்மாக்களிடத்திலும், மகாமகத்துவமுள்ள மாசுகளை எடுத்துக் "குடி அரசு" சொன்னால், என்னமோ தங்கள் மருமகப்பிள்ளைகளைப் பற்றிச் சொல்வது போலவும், நினைத்து மண்டையிலடித்துக்கொள்கிறார்கள், மன்னிப்புக்கேட்கச் சொல்லுகிறார்கள். மயங்கி மடமடவென்று மயங்கிக்கொள்ளுகிறார்கள். கும்பாபிஷேகத்தைப்பற்றியும், குருக்கள்களைப்பற்றியும், குருமார்களைப் பற்றியும், கும்பகோணத்துக் குஷ்டரோகத் தண்ணீரைப்பற்றியும், குன்மவியாதிகளை உண்டாக்கும் குளங்களைப்பற்றியும், குண்டஞ்சுகளைப் பற்றியும், குமரவேலன்களைப்பற்றியும், ஜனசமூகத்தினிடம் குவிந்து கிடக்கும் குருட்டு நம்பிக்கைகளைப் பற்றியும், குணமில்லாக்கடவுள்களைப்பற்றியும், குரும்பர்களைப்பற்றியும் சுயமரியாதைக்காரர்கள் பேசினால், அவர்களிடமுள்ள குட்டுகளை, சூட்சிகளை எடுத்துக் "குடி அரசு" சொன்னால்: குடியைக்கெடுக்கவந்தது "குடி அரசு" என்று தங்கள் வீட்டுக்குச்சுகள் பிரிந்து குப்பர விழப்போகிறதைப்போல், குறுக்கிட்டுக் குலைக்க வருவானேன்? அது ஏன் என்று தான் "குடி அரசு" குத்துகிறது.

ஆனால் அவர்கள் சொல்லுவதிலும் உண்மையில்லாமலில்லை. குடியைக் கெடுக்க வந்ததுதான். ஒரு விதத்தில் வாஸ்தவந்தான் என்று நான் துணியைப்போட்டுக் கூடத்தாண்டுவேன். அதிலும் நம்பிக்கையில்லாவிட்டால் குப்புரப்படுத்துக்கொண்டால் வேண்டுமானால் குறுக்கே தாண்டுவேன். அதிலும் நம்பிக்கையில்லாவிட்டால் வேண்டுமானால் நாக்கால் மூக்கைத்தொடுகிறேன். யார் குடியைக்கெடுக்க வந்தது? என்பீர்களோ! கல்நெஞ்சமுள்ள 'பார்ப்பனர் தம்மைப்படைத்து காகத்தை என் செய்யபடைத்தாய்'? என்று ஒருவர் வருத்தப்பட்டிருக்கிறார். அதுபோல கல்நெஞ்சமுள்ள கருமாதிச்சாமிகள், மக்கள் கஷ்டப்படுவதையும் பார்த்துக்கொண்டு கல்லுகளாயிருக்கும் கருணையற்ற கடவுள்கள், கல்யாணத்துக்கும் காசு, கருமாதிக்கும் காசு, கரிநாளுக்கும் காசு, கார்த்திகைக்கும் காசு வாங்கும் கண்ணியமில்லா, கருணையில்லா கயவர்களும், எவ்வெவ்வகையில் யார் யார் மனதில், குடியேறியிருக்கின்றனவோ, அவர்களுடையவும், அவைகளுடையவும் குடியைக் கெடுக்கத்தான் "குடி அரசு" வந்தது. மோக்ஷ லோகத்திற்குப் போகலாமென்று தங்களிடமுள்ள சொற்ப வருவாயில் சில மோசக்காரர்களிடம் தங்கள் பொருள்களை இழந்து பசிப்பிணியால், பணக்கஷ்டத்தால், வாழும் மக்களின் மனதில் மோக்ஷம், நரகம் என்பனவாகிய புல்லுருவிகள் போய் குடியிருந்தால், அவைகளின் குடியைக்கெடுக்க வந்ததுதான் "குடி அரசு".

கங்கை ஜலத்தில் எலும்பைக்கரைத்தால் தன் தகப்பன் கஷ்டப்படாமல் கைலாயம் அடைவார் என்ற கருத்தில்லா நம்பிக்கையும், கங்கை ஜலத்தாலும், களிமண்ணாலும் தோஷம் நீங்கும் என்ற கண்டறியா நம்பிக்கையும், தீயில் குளித்தால், நடந்தால் மோக்ஷம் கிடைக்கும், நல்ல கதிக்குப் போகலாம் என்ற தீய நம்பிக்கையும், கார்த்திகை தீபத்துக்குப் போனால் தங்கள் கர்மம் தொலையுமென்று போய் கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருளை கல்லுச்சாமிகள் பேராலும், கள்ளர்களுக்கும் பரிகொடுத்துவரும் கண்மூடி நம்பிக்கையும், யார் யார் மனதில் எவ்வெவ்வகையில் போய் குடியேறியிருக்கின்றனவோ அவைகளுடையக் குடியைக்கெடுக்க வந்ததுதான் "குடி அரசே" ஒழிய வேறு ஒருவருடைய குடியையும், மக்களையும் கெடுக்க "குடி அரசு" வந்தது அன்று. பகுத்தறிவை உண்டாக்கி, பண்டைய காலத்துப் பயனற்றப் பழக்கங்களைப் பஞ்சாய்ப் பறக்கடிக்க வந்த "குடி அரசை"க் குடியைக்கெடுக்க வந்தது என்றால், ஏன் என் பேனாவுக்குக் கோபம் வராது. சரிதான் எழுதிக்கொண்டேயிருந்தேனானால் நீங்களும் படித்துக்கொண்டேயிருப்பீர்கள்! பயமாகிறது. பிறகு பார்த்துக்கொள்வோம், கிணற்றுத்தண்ணீரை வெள்ளமா கொண்டு போகப்போகிறது? உம்!

---

## ஆம்பூர் ஆதிதிராவிடர்களின் பரிதாப நிலைமை.

கடந்த 23-7-32-ல் பிற்பகல் 3-மணிக்கு தற்செயலாக ஆம்பூர் கஸ்பா ஆதிதிராவிடர்களின் 139 வீடுகள் தீக்கிரையானது மல்லாமல் சுமார் 10000 ரூபாய் நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அத்தீவிபத்தில் யாரும் மரணமாகவில்லை. மேற்படியூர் அபிவிருத்தி சங்கத்தலைவர் எ, வி பெரியசாமியார் வீட்டிலிருந்த பல பத்திரிகைகளும் அநேக தமிழ் காவியங்களும் 3 வருஷ சர்க்கார் ரிக்கார்டுகளும் தீக்கிறையாயின. இந்த ஏழை ஆதிதிராவிட குலமக்களை காப்பாற்றும் பொருட்டு ஆம்பூரிலுள்ள பெரிய மகமதிய கனவான்களும் வியாபாரிகளும், பணக்காரர்களும் காருண்யம் நிறைந்த கவர்ன்மெண்டாரும் மற்றும் பல கனதனவான்களும் பொருளுதவியும், இன்னும் பல உதவிகளையும் புரிந்து 139 வீடுகளை இழந்த இந்த ஆதிதிராவிட குல மக்களையும், குழந்தைகளையும் ரட்சிக்கும்படி மிகவும் வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறேன் என மேற்படியூர் திரு ஜி. டி. ராஜன் எழுதுகிறார்.

---

## தமிழ்நாட்டுப்பலசாலிகள் மகாநாடு.

இம்மகாநாடு வரும் 13, 14-8-32 சனி, ஞாயிறுகளில் செட்டி நாடு ரயில்வே ஸ்டேஷனுக்கெதிரிலுள்ள ராஜாசர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் கிரௌண்டில் புரொபசர் கே. வி. அய்யர், பி. சி. அவர்களின் தலைமையில் நடைபெறுமென காரியதரிசி எழுதுகிறார்.

# ஏழைகள் துயரம் எதனால் ஒழியும்?

## புத்தர் இயக்கம், முஸ்லீம் ராஜ்யம் யாரால் ஒழிந்தது?

[சாமி. சிதம்பரனர்]

சுயமரியாதைக்காரர்கள் விரும்பும் சீர்திருத்தம் புதிதல்ல. இவர்களைப்போல பல சீர்திருத்தக்காரர்கள் இதற்கு முன்னும், நமது நாட்டிலும், பிறநாட்டிலும் தோன்றியிருக்கிறார்கள். சீர்திருத்தக் கொள்கைகள் எந்தக்காலத்திலும் பொது ஜனங்களின் மனத்தைக்கவராமல் போவதேயில்லை. ஆதலால் அந்தப்பழங்காலத்துச்சீர்திருத்தக் காரர்களின் கொள்கைகளும் நாடெங்கும் பரவின. பொது ஜனங்கள் அவைகளைப்பின்பற்றவும் ஆரம்பித்தனர்.

ஆனால், நாளடைவில், வைதீகர்களால் சீர்திருத்தக் கொள்கைகள் அழிக்கப்பட்டுவிட்டன; வைதீகர்கள் எப்பொழுதுமே மகாமாயக்காரர்கள். பாமரமக்களைத் தம்வசப்படுத்துவதற்குரிய திறமைவாய்ந்த வர்கள். அன்றியும், அவர்களிடம் ஆள்பலமும், பொருள்பலமும் உண்டு, இவை இருந்தால் செல்வாக்கும் இருக்கும் என்பதைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

எந்தக்காலத்திலும், பணக்காரர்களும், ராஜாக்களும், சுயநலங்கருதும் படிப்பாளிகளும் வைதீகர்களைச் சார்ந்து தான் நிற்பார்கள். இவர்கள் அவர்களுக்கு ஆதரவு அளிப்பவர்கள், அவர்கள் இவர்களுக்கு ஆதரவு அளிப்பவர்கள், இருவரும் பங்காளிகள், ஆகையால் இரு கூட்டத்தாரும் ஒன்று சேர்ந்து சீர்திருத்த இயக்கங்களை நசுக்கி விடுவது வழக்கம்.

உதாரணமாக நமது நாட்டில் பரவியிருந்த புத்த மதத்தை எடுத்துக் கொள்ளலாம். புத்தர் நம்மைப்போன்ற ஒரு சீர்திருத்தவாதி என்பதை யார் மறுக்க முடியும்? "கடவுளைப் பற்றிக்கவலை வேண்டாம்; மறுமையைப்பற்றிச் சிந்திக்க வேண்டாம்; இவ்வுலகில் ஒழுங்காக நட; உன்னுடைய சகோதரர்களுக்கு உதவிசெய், மக்கள் அனைவரும் சகோதரர்களே; ஆண்களுக்குள்ள உரிமைகள் பெண்களுக்கும் உண்டு." என்று கூறும் புத்தமதத்தைச்சீர்திருத்த இயக்கம் என்று ஏன் கூறமுடியாது? இன்று சுயமரியாதைக்காரர்கள் கூறுவதும் இதுதானே.

இத்தகைய உயரிய இயக்கத்தை இந்தியாவில் குறுகச் செய்தவர்கள் யார்? வைதீகர்கள் அல்லவா? ஆத்மாவில் வித்தியாசம் இல்லை. ஆத்மாவில் வருணாச்சிரம தருமம்இல்லை; எல்லா ஜீவன்களும் சிவமே, சிவன் வேறன்று ஜீவன் வேறன்று; என்று பிரசாரம் பண்ணி, சங்கராச்சாரியார் கூட்டத்தார் புத்த மதத்தை ஒழித்தார்கள்.

"அன்புதான் கடவுள்; அறிவுதான் கடவுள்; அன்பையே சிவமென்று சொல்லுவது, சிவமும் அன்பும் வேறல்ல. சிவனைவணங்குபவர்கள் எல்லோரும் ஒன்றே. "ஆவுரித்துத்தின்றுழலும் புலையரேனும்" சிவனைவணங்குவாராயின் அவர்கள் கடவுளுக்குச்சமமானவர்களே" என்று சைவர்கள் பிரசாரம் பண்ணிப்புத்த மதத்தை ஒழித்தனர்.

இது போலவே, வைணவர்களும், "வைணவத்தில்ஜாதியில்லை, விஷ்ணுவை வணங்குபவர்கள் அனைவரும் ஒன்றே "பாதியாய் அழுகிய கால் கையரேனும், ஆதியாய்! அரவணையாய்! என்பாராகில் "அவர்கள் நாம் வணங்கும் கடவுளாவார்" என்று கூறிப்பாமர மக்களை வசப்படுத்தி, புத்த மதத்தை ஒழித்தனர்.

புத்த மதம் பரவுவதற்கு முக்கிய காரணமாயிருந்த, சகோதரத்துவத்தை இந்த வேதாந்திகளும், சைவர்களும், வைணவர்களும் ஒப்புக்கொண்டு பிரசாரம் பண்ணியும் புத்தகங்களில் எழுதியும் புத்தமதத்தை ஒழித்தார்களேயன்றி, உண்மையில் இவர்கள் அனுசரிப்பது வருணாசிரம தருமமே என்பதை யார் மறுக்க முடியும்?

இது போகட்டும், இன்று இந்தியா முழுவதும் ஆங்கிலேயர் ஆட்சிக்குள் வருவதற்குக்காரணம்யார்? நமது நாட்டு வைதீகர்கள் தான் என்பதில் ஐயமில்லை. ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன் நமது நாட்டில் பெரும் பாகம் முஸ்லிம் ராஜ்யமாக இருந்தது என்பது சரித்திரங்கற்றோர்க்குத் தெரிந்த விஷயம். முஸ்லிம் ராஜ்யத்தை அழிப்பதற்குக் காரணமாயிருந்தவர்கள் இந்துக்கள்; அதிலும் இந்து வைதீகர்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறோம்.

அதற்கு முன்னிருந்த இந்துக்களின் ராஜ்யத்தைவிட, முஸ்லிம்களின் ராஜ்யம் எவ்வளவோ நேர்மையாகவும் ஒழுங்காகவும் நடந்து வந்தது. இந்துக்கள் வருணாச்சிரம தருமிகள்; ஆகையால் இந்து அரசர்கள் ஆண்டகாலத்தில் வருணாச்சிரமதரும ராஜ்யம் நடந்து வந்தது; மனுநீதியே சட்டமாக இருந்தது. ஆதலால் வைதீகர்கள் பாடு கொண்டாட்டமாக இருந்தது.

முஸ்லிம்கள் வந்தபின் வருணாச்சிரமதரும ராஜ்யத்திற்கு, மனுநீதிச்சட்டத்திற்கு இடமில்லை; முஸ்லிம்கள் சாதி வேற்றுமை யறியாதவர்கள்; உயர்வு தாழ்வைக் கருதாதவர்கள். ஆகையால் அவர்களின்மேல் வைதீக இந்துக்களுக்கு வெறுப்பும் துவேஷமும் உண்டாயிற்று.

அன்றியும், புத்தர்கள் தங்கள் சமரசக் கொள்கையை மக்களிடம் பரவ வைத்து, வைதீக வருணாச்சிரம தருமத்தை அழிக்க முயன்றது போலவே முஸ்லிம்களும் செய்ய ஆரம்பித்தார்கள். முஸ்லிம்கள், இந்துக்களைத் தங்கள் மதத்தில் சேரும்படி—தங்கள் கொள்கையைப் பின்பற்றும்படி கூறியது, வருணாச்சிரம தருமத்தையும், சாதி உயர்வு தாழ்வையும், அதனால் ஏழைகள் படும் துயரத்தையும் ஒழிக்கவே யாகும்.

இன்று இந்தியா முழுதும் இஸ்லாத்தைப் பின்பற்றியிருக்குமானால், சாதி உயர்வு தாழ்வுகள் ஒழிந்திருக்கும்; வருணாச்சிரம தருமம் அழிந்திருக்கும்; தீண்டாதார் என்னும் சாதியாரே இருக்க மாட்டார்கள்; சாதிச் சண்டைகள், மதச் சண்டைகள் என்று கேள்விப்படவே இடமிருந்திராது; தேசம் அன்னியர் ஆட்சியிலும் இருந்திராது. சுயாட்சி சுகமடைந்து கொண்டிருக்கும், ஆனால் நமது நாட்டுப் பாழும் வைதீகர்களே இதைக் கெடுத்தவர்கள்.

சிவாஜி போன்ற இந்து அரசர்கள் வீரர்களாக இருக்கலாம், சூரர்களாக இருக்கலாம், தேசாபிமானிகளாக இருக்கலாம், ஆனால், வருணாச்சிரம தருமத்திற்கு ஆதரவளித்து, அதனால் ஏழைமக்களை இன்று வரையிலும் துயரமுறும்படி செய்தது வைதீகக்கங்காணிகள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஐரோப்பியர்கள் நமது நாட்டிற்கு வந்தகாலத்திலும், அவர்களுக்குத் துணையாக இருந்து கொஞ்சநஞ்சம் இருந்த முஸ்லிம் ராஜ்யத்தையும் தொலைக்க வழிதேடியவர்கள் நமது நாட்டு வைதீகர்கள் என்பதில் ஐயமில்லை. வைதீகர்களுக்கு எந்த ராஜ்யமாயினும் கவலையில்லை; தங்கள் வருணாச்சிரம தருமத்தில் தலையிடக்கூடாது; மதத்தினால், சடங்குகளினால், சாஸ்திரங்களினால் பாமர மக்களை ஏமாற்றும் உரிமையில் தலையிடக்கூடாது. இவ்வளவு தான் வேண்டும். இதை ஒப்புக் கொள்ளுகின்றவர்களை ஆதரித்தே தீருவார்கள்.

இவர்கள் அபிப்பிராயத்திற்கு இணங்க விக்டோரியா மகாராணியாரும், "இந்துக்களின் மதநாகரிகங்களில் அரசாங்கத்தார் தலையிடுவதில்லை" என்று உறுதிமொழி கூறினார்கள். ஆகவே வைதீகர்கள் அனைவரும் ஆங்கிலேயரை ஆதரிக்கத்தொடங்கினர்கள்.

ஆனால் இன்று நமது நாட்டு வைதீகக்கூட்டத்தார் ஆங்கிலேயரை வெறுப்பதற்குக் காரணம் என்ன? மதத்தில் தலையிடுவதில்லை என்று வாக்களித்த அவர்கள் சீர்திருத்தத்திற்குக் கொஞ்சம் ஆதரவளிக்க விரும்பியது தான். இற்றைக்கு நூறு வருஷங்களுக்கு முன் உடன் கட்டை யேறுதலைத்தடுக்கும் சட்டம் ஏற்பட்டது முதலே ஆங்கிலேயரைப்பற்றி வைதீகர்கள் விஷமப் பிரசாரம் பண்ண ஆரம்பித்து விட்டார்கள். இவர்களும், மனுதர்ம ஆட்சியைக் கைப்பற்றத் தொடங்கி விடுவார்களானால் நமது நாட்டிலுள்ள ஒரு வைதீகனாவது, ஆங்கிலேய ராஜ்யத்தை வெறுக்க மாட்டான். ஜார்ஜ் மன்னரை மகாவிஷ்ணுவின் அவதாரமாக்கிப் புராணங்கள் எழுதி விடுவார்கள் என்பதிலும் ஐயமில்லை.

இதுவரையிலும் கூறியவற்றால் எந்தக்காலத்திலும் நமது நாட்டில், நமது நாட்டில் மட்டிலும் அன்று, அன்னியநாடுகளிலும் கூட— சீர்திருத்தத்திற்கு விரோதியாக இருப்பவர்கள் வைதீகர்களே என்பதை யறியலாம்.

ஆகையால் இன்று சீர்திருத்தக்காரர்களாக விளங்கும் சுயமரியாதைக் காரர்களையும், 'ஒழிக்க வைதீகர்கள் பல வகையான தப்புப்பிரசாரம் பண்ணலாம். நாஸ்திகர்கள் என்றும், தேசத்துரோகிகள் என்றும், மூடர்கள் என்றும் பலவாறு கூறலாம். எவ்வளவு கூறினாலும் இனிச் சீர்திருத்த இயக்கத்தை அழிக்க முடியாது. ஒருக்கால் சுயமரியாதை இயக்கத்தை அழித்து விட்டாலும் விடலாம்; அந்தப் பெயரை வழங்காமல் கெடுத்துவிட்டாலும் விடலாம்; ஆனால் அதன் கொள்கைகளை ஒழிக்க முடியவே முடியாது என்பது மாத்திரம் நிச்சயம்.

ஏனென்றால், பண்டைக்காலத்தில்—அதாவது வைதீகர்கள் சூழ்ச்சி செய்து, புத்த மதத்தையும், முஸ்லிம் ராஜ்யத்தையும், அழிக்க முயன்ற காலத்தில் இருந்த மக்கள் வேறு; இப்பொழுது இருக்கும் மக்கள் வேறு; அவர்கள் பிறர் கூறும் வார்த்தையை நம்பும் குணமுடையவர்கள்; பிறர் கூறுவதை ஆராய்ந்து பார்க்கும் திறமையில்லாதவர்கள்; இப்பொழுதுள்ள மக்களோ சிந்திக்கும் திறமையுள்ளவர்கள்; எது தங்களுக்கு நன்மை பயக்கும்; எது தங்களுக்கு நன்மை பயக்காது என்பதை அறியும் திறமை உடையவர்கள். ஆகையால் இவர்களைச் சுலபமாக ஏமாற்ற முடியாது.

இன்று சுயமரியாதை இயக்கம் கூறும் நாஸ்திகம் தான் என்ன?

மனிதர்களுக்குள் வித்தியாசம் ஒன்றும் இல்லை. எல்லோரும் சகோதரர்கள்; ஆகையால், உணமையற்ற சாதியைக்கொண்டும், மதத்தைக்கொண்டும், நாகரிகத்தைக்கொண்டும் மற்

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

# கடவுள் வெறியும், மதவெறியும்.

[தோழர் அ. இராகவன்]

(சென்ற வாரத் தொடர்ச்சி)

எமது ஜில்லாவின் பிரதான நகரமொன்றிற்கு அருகிலுள்ள சிற்றூரில் இற்றைக்கு எட்டு ஆண்டுகட்கு முன்னர் ஓர் அழகிய யுவதி ஒருவள் வடநாட்டிலிருந்து வந்து குடி புகுந்தாள். அப்பெண்மணி செண்பகமலரெனச் சிவந்த மெய்யினள். அவளது அழகிய முகாரவிந்தம் கண்டோரை வசீகரிக்கும். அவளுக்கு வயது சுமார் 20, அல்லது 22 என்று மதிக்கலாம். அவளுடைய பேச்சும் நடையுடைகளும் மிகுந்த நாகரிக முடையதாயிருந்தது. அவளிடம் உரையாடிய எவரும் இனி இம்மங்கை நல்லாளோடு எப்பொழுது பேச சந்தர்ப்பம் வாய்க்கும் என்று எண்ணி ஏமாந்திருப்பர். இம்மடமாது இவ்வூருக்குப் போந்த சின்னாட்களுக்குள் தாம் வசிக்கத்தகுந்த ஜாகையொன்றை அமைத்துக்கொண்டாள். அங்கு ஆண்மக்கள் எவரும் போக முடியாது. தனக்குரிய வேலையாட்களெல்லாம் பெண்களாகவே வைத்துக்கொண்டாள். தம் ஜாகைக்குள் ஒரு பெரிய பூஜை மடம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டாள். காலையிலும் இரவிலும் பூஜை நடைபெறும். அப்பூஜைக்கு ஏராளமான பெண் மக்கள் சென்று வந்தனர். திடீரென அப்பெண்மணியின் பெயர் ஜில்லாமுழுவதும் பிரபல்யமாயிற்று. அப்பெண்மணி நல்ல ஜோதிட சாஸ்திரியென்றும், எத்தகைய பேய் பிசாசுகளை விரட்டியடிக்கத்தக்க மாட்சியுள்ளவள் என்றும், வைத்தியத்தில் மிகுந்த நிபுணத்துவமுடையவள் என்றும் எங்கும் பெரிய விளம்பரமாகி விட்டது. ஏராளமான பெண்மணிகள் தங்களைப் பிடித்திருக்கும் கெட்ட காலங்கள் எப்பொழுது நீங்குமென்றும், தங்கள் மக்களுக்கு எப்பொழுது மணம் நடைபெறும் என்றும், தங்கள் பந்துக்களுக்கு கருப்பு அணுகியிருக்கிறதைப் போக்குதல் வேண்டுமென்றும், நீண்ட நாளாய் தங்களுக்குப், பிள்ளையில்லை, ஆகையால் பிள்ளை வரம் வேண்டுமென்றும் கேட்டுப்போய் வந்தனர். பெண்கள் அதிகப் பேர் போய் குழுமியதால் அங்கு சில அயோக்கியர்கள் நடந்துகொண்ட துஷ்டத்தனமான செயல்களுக்கு அளவேயில்லை. பிள்ளையில்லை, பிள்ளைவரம் வேண்டுமென்று சென்ற பெண்களில் வாலிபமும் அழகும் இல்லாத பெண்களுக்கு உனக்கு பிள்ளை வரம் கொடுக்க முடியாதென்று அம்மன் சொல்லுகிறாள் என்று கூறி அனுப்பிவிடுவாள். அழகிய யுவதிகளைப் பார்த்தால் உனக்குப் பிள்ளை வேண்டுமானால் நீ மடத்தில் 40 நாள் நோன்பு இருக்கவேண்டுமென்பாள். அப்பெண்ணும் இணங்கியிருப்பாள். அப்பெண்ணின் உறவினரான ஆண் மக்கள் எவரும் உள்ளே அனுமதிக்கப் படுவதில்லை. இரவில் மிகுந்த சுத்தமான ஓர் அறையில் அப்பெண் தனியாக நித்திரை செய்ய வேண்டும். மாந்திரீககாரியாகிய இப்பெண் பிள்ளைவரம் பெற ஆங்கு போந்த பெண்ணை அழைத்து, அம்மா உன் விஷயமாய் நமது தேவியிடம் எவ்வளவோ மன்றாடி கேட்டிருக்கிறேன். இற்றைக்கு பதினைந்தாம் நாள் இரவில் நடுயாமத்தில் அம்மன் உன் மீது வந்து விளையாடுவாள். அப்பொழுது நீ கண்களைத் திறந்து பார்க்கவே கூடாது. மீறிப்பார்த்தால் கண்கள் பொட்டையாய் விடும், பிறகு, என்மீது குறை கூறக்கூடாது. அம்மன் உன்னை விட்டு நீங்கி, அரைமணி நேரத்திற்குப்பின்னரே கண்விழிக்க வேண்டுமென்று காதில் ரகசியமாய் ஓதிவிடுவாள். அவ்வாறே குறிப்பிட்ட நாளிரவில் அம்மன் போய் அப்பெண்மணியுடன் சம்போகஞ்செய்து விட்டு போய் விடும், அரைமணி நேரங்கழித்துப்பெண் கண் விழித்துப்பார்த்தால் உண்மையிலே தன்னுடன் அம்மன் வந்து சம்போகித்து விட்டுப்போயிருக்கிறாள் என்று பேதைப்பெண்கள் பலர் எண்ணினர்கள். இப்படி எத்தனையோ பணக்காரர் வீட்டுப் பெண்மணிகளெல்லாம் பிள்ளை வரம் பெற்று திரும்பி வந்ததில் அநேகர் பிள்ளைகளுமுண்டானர்கள். சிற்சில சமயம் இம்மந்திரகாரி பெரிய மிட்டாதார்கள், பிரபுக்கள் வீடுகளுக்கு நேராகப் போயும் ஜோதிடமுதலியன பார்த்து வந்தாள். இவ்வாறு ஒரு கனவான் வீட்டிற்குப்போயிருந்து வெகுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்துவிட்டு தம் ஜாகைக்குத் திரும்பும்பொழுது அவ்வீட்டுக் கனவான் அம்மையே இரவாகி விட்டபடியால் இரவு எமது இல்லத்தில் தங்கிவிட்டு காலையில் போகலாம் என்று கட்டாயப்படுத்தி அன்று தம்மில்லில் தங்கிப் போகும்படி செய்துவிட்டார். மாந்திரீககார பெண்மணி இரவில் எவர் வீட்டிலும் தங்கும் வழக்கமும் கிடையாதென்றாலும் தம் மனதிற்கொண்ட சில பேராவலை நிறைவேற்ற இதுவே சமயமென்று இரவு தங்க இசைந்துகொண்டாள். இரவுபோஜனமருந்திவிட்டு அவ்வீட்டில் புஷ்பவதியாயிருந்த ஒரு பெண்ணுடன் இரவு படுத்திருந்தாள். இரவு சுமார் 1-மணிக்கு அப்புஷ்பவதியான பெண் பெருங் கூக்குரலிட்டது. எல்லோரும் விழித்து விஷயமென்னவென்று விசாரிக்க ஓர் ஆண்மகன் தன்னிடம் வந்து பலவந்தமாய் புணர முயன்றதாய் தம் தாயிடம் கூறினள், தாய் தன் மகனிடம் கூறினள். மகன் எங்கும் நன்றாய்ப்பார்த்துவிட்டு கனவாயிருக்குமென்று எண்ணிவிட்டு தன்கருத்தை நிறைவேற்ற இதுதான் சமயமென்று மந்திரகாரியாகிய பெண்ணை ஒரு அறைக்குள் அழைத்து பலவந்தமாய் சோதித்துப்பார்க்க அவள் பெண்ணல்ல, ஓர் ஆண் என்பதை அறிந்து போலீசாரிடம் ஒப்புவித்தார். விஷயம் ஊரெங்கும் பரவிவிட்டது. பிள்ளைவரம் கேட்கச்சென்று பிள்ளையைப்பெற்றெடுத்த பெண்களெல்லாம் வெளியில்வர வெட்கமுற்று வாயடங்கிவிட்டனர். இதனால் கற்பழிந்துபோன பெண்கள் கணக்கிலர். அவர்கள் கற்பழிந்துபோனது கடவுள் பேரில் கொண்ட வெறியும் அதனால் மக்கள் கொண்ட மூடபக்தியுமல்லவா? என்பதை ஆலோசித்துப்பாருங்கள். (சிற்சில காரணங்கள் இவைகள் நடந்த இட முதலிய விவரங்களை வெளியிடமுடியாதிருக்கிறது)

இன்னும் சில்விடங்களில் பிள்ளைவரம் வேண்டுமென்று சுவாமியை நினைந்து பெண்மணிகள் தங்கள் சக்திக்கேற்ப ஒரு முறை இருமுறை சுவாமிபுணர இடங்கொடுப்பதாய் தீர்மானித்துக்கொண்டு சில குறிப்பிட்ட ஆபாசமான விக்ரகங்களுடன் பெண்கள் கூத்தாடி இரவில் கோவிலின் அருகிலுள்ள பச்சையிலைகளால் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் சயனித்துக்கொள்வார்களாம். இரவில் கோயிற்சோற்றையுண்டு கோவிலிலே வசிக்கும் சில குண்டர்கள் இப்பெண்களோடு புணர்ந்து வருகின்றனர். அப்பெண்மணிகள் உயிரற்றசாமிகளே தம்முடன் வந்து சேர்ந்துபோனதாக இன்றளவும்எண்ணிவருகின்றார்களாம்.

டி. பி. ஹண்டு என்ற துரைமகனால் எழுதப்பெற்ற கிறிஸ்துமார்க்க அத்தாட்சி என்ற நூலின் 109-ஆம் பக்கத்தில் கத்தோலிக்க மார்க்கத்தார் கடவுள் வார்த்தைகளுக்கு கீழ்படிந்து நடக்கவேண்டும் என்ற நம்பிக்கையினால் ஏற்படுத்திய ஆணும்பெண்ணும்விவாகம் பண்ணாதிருத்தலும் பாப மன்னிப்பென்றஓர் மூடச்செயலாலும் உண்டாகும் விபசாரத்தை விளக்கியிருக்கின்றார். அதன் சாரம் பின் வருமாறு,

"குருமார் விவாகம் பண்ணாதபடி மறிப்பதினாலும், கன்னியாஸ்திரீ மடங்களிலே பெண்களும், சந்நியாசி மடங்களிலே ஆண்களும் விவாகம் பண்ணாமலிருக்கச் செய்வதினாலும், பாவ உத்திரவுச் சீட்டு விற்பதினாலும் சொல்ல முடியாத வேசித்தனமும் கொலை பாதகமும் நடக்க ஏது உண்டானது. கிப்பன் என்பவர் ஓர் பேர்பெற்ற சரித்திரக்காரர். அவர் ஒரு அவிசுவாசி. அவர் புரோட்டெஸ்டாண்டு மார்க்கத்தாருக்காகப் பொய் சொல்லுவாரென்று யாதொருவரும் நினைக்கவிடமில்லை. அவர் சொல்லுவது— "பன்னிரண்டாம் யோவானென்கிற பாப்புரோமை ஸ்திரீகளோடு வெளிவெளியாய் வேசித்தனஞ் செய்தார். பாப்புவின் அரமனை வேசிகள் வீடுபோலிருந்தது. அவர் கன்னிகைளையும், கைம்பெண்களையும் பலோற்காரம் செய்தபடியால், சம் பேதுருவின் கல்லறைக்கு யாத்திரை போவதைப் பெண்கள் விட்டுவிட்டார்கள். பத்தாம் லியோவாகிய பாப்புவின் காலத்தில் பாவ உத்திரவு வரியுண்டாக்கப்பட்டது. அதன்படி முறையற்றவர்களோடு செய்யும் விபசாரங்களை கண்டு பிடிக்கப்படாவிட்டால் அதற்கு வரி ஐந்து குரோஷென், கண்டு பிடிக்கப்பட்டால் ஆறு குரோஷென். அப்படி மறு விபசாரத்துக்கும் சிசுவதைக்கும், மற்றும் பாவங்களுக்கும் வரி நியமிக்கப்பட்டது. அக்காலத்தில் பரிசுத்தவான்களுடைய கல்லறைகளுக்கும் யாத்திரை நியமிக்கப்பட்டது. இந்த யாத்திரகள் அநேக பாவங்களை

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

# "கவர்னர் சவுக்கடி சென்னை சட்டசபை."

2-8-32௳ பகல் 11 மணிக்கு சென்னை சட்டசபை, திரு. பி. ராமசந்திர ரெட்டி அவர்கள் தலைமையிற் கூடிற்று. அதுசமயம் சென்னைக்கவர்னர் விஜயம் செய்து முதலாவதாக தனது சொற்பொழிவாற்றினார்.

தனது பிரசங்கத்தில் ஒரு சில மாறுதல்களோடு வாக்குரிமைக் கமிட்டி சர்க்கார் திட்டங்களை ஒப்புக் கொண்டதைத் தான் பாராட்டுவதாகவும், இந்தியா மந்திரியின் அறிக்கையைப் பற்றி விவாதிக்க தான் நிராகரித்ததின் காரணத்தை விளக்கியும், சீர்திருத்தத்தைத் துரிதப் படுத்த வேண்டிய வழிகளையும், அவசியத்தையும் வற்புறுத்தி பின்னும் குறிப்பிட்டதாவது:—

### அவசர சட்டங்கள் அவசியமா?

இந்த வருட ஆரம்பத்திலிருந்து அமுலிலிருந்து, சென்றமாதம் காலாவதியான அவசரச்சட்டங்களில் சிலவற்றை, புதுப்பிக்க வேண்டியதாயிருந்தது. என்னுடைய சர்க்காரும் நானும், இச்சட்டங்களை ரத்து செய்தால் கஷ்டங்கள் உண்டாகாது என்று தெரிந்து கொள்ளும் பக்ஷத்தில் விருப்பத்துடனும் சந்தோஷத்துடனும் ரத்து செய்யத் தயாராயிருக்கின்றோம். ஜனங்களில் சிலர் பிரயோஜனமற்ற சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்திக் கொண்டு வரும் போது அவசரச் சட்டங்கள் இருக்க வேண்டியது அவசியமே. இந்த மாகாணம் முழுமையும் இச்சட்டங்கள் கையாளப் படவில்லை. தண்டனை அடைந்தவர்களின் தொகையும் அவ்வாறல்ல என்று காட்டுகின்றது. புதிய சீர்திருத்தங்கள் ஆரம்பிப்பதற்கு விரோதமாக கிளர்ச்சி செய்பவர்களை மாத்திரம் அடக்குவதற்காக இச்சட்டங்கள் உபயோகத்திலிருக்கின்றன. புதிய சீர்திருத்தங்கள் எவ்வளவு சிறந்தவையாயிருந்தபோதிலும், சட்டத்திற்கும், அமைதியான தன்மைக்கும் விரோதமான உணர்ச்சி நாட்டில் அதிகரித்தால், மிகவும் கெடுதியே உண்டாகும். ஆகையினால் இந்த மாகாணத்து எதிர்கால பொறுப்புள்ள சர்க்காருக்கு, என்னுடைய சர்க்காரும், நானும் ஜனங்களும் வெகு சிலரைச் சட்டத்தை மீற விடமாட்டோம். அப்படி இவர்களைச் சட்டத்தை மீறும்படி சும்மா விட்டுவிட்டால் சீக்கிரம் அராஜகமும், குழப்பமும் நாட்டில் பரவிவிடும்.

ஃ ஃ

### கட்சிகளும், கோஷ்டிகளும்

தங்களுக்குச் சொல்ல வேண்டியதும், ஆனால் தற்சமயத்திற்குதே வைபில்லாததுமான மற்றொரு விஷயமிருக்கிறது. இது யோசனைக்கு வர சில வருடங்கள் செல்லும். ஆனால் இவ்விஷயம் எனக்கு முக்கியமானதென்று தெரிவதால் தங்களுக்குக் கூறுகிறேன்.

பார்லிமெண்டு ஸ்தாபிப்பதற்கு இரண்டு முக்கியமான முறைகளிருக்கின்றன. ஒன்று கட்சிமுறை, மற்றொன்றுகோஷ்டிமுறை. கட்சிமுறை பார்லிமெண்டுகிரேட்பிரட்டனிலும், அமெரிக்காவிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. கோஷ்டிமுறைபார்லிமெண்டு பிரான்ஸிலும், ஜெர்மனியிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எனக்குத் தெரிந்த வரையில் அவற்றினுள் வித்தியாசமென்னவெனில், கட்சி முறைக்குத் தலைவர், அவர் தலைவராயிருக்குமட்டில் தன்னுடைய கட்சியின் ஆதரவைப்பெற அருகதையுள்ளவராகயிருக்கிறார். கோஷ்டி முறையில் தலைவராயிருப்பவர், பல கோஷ்டியினரையும் திருப்திசெய்து தங்களுடைய கட்சிக்குப் பலத்தைத் தேடிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால் கட்சிமுறை அரசியலே சிறந்ததென என்மனதில் படுகின்றது. அனுபவத்தில் அம்முறையே மேன்மையானதெனத் தெரிவதால் நான் கூறுவது சரியானதென்றே நினைக்கிறேன். நான் உங்களைக் கேட்பதென்னவெனில், இம்மாகாணத்தில் கட்சிமுறை பலமாகயிருக்கிறதா? கோஷ்டிமுறை பலமாகயிருக்கிறதா? வென்பதாகும். இம்மாகாணத்து பிரஜைகள் ராஜீய விஷயங்களை நன்றாகத் தெரிந்துக் கொண்டிருக்கிறபடியால் ராஜீய விஷயங்கள் ஜாதியையும் வகுப்பையும் பிளக்குமா? அல்லது ஜாதியும், வகுப்பும், ராஜீய விஷயத்தைப் பிளக்குமா? இக்கேள்விக்கு என்னால் பதில் கூறமுடியாது. நீங்களும் இதற்கு சரியான பதிலும், முடிவில் என்னகுமென்றும் கூற முடியாதென நினைக்கிறேன். ஆனால் இத்தகைய கேள்விகள் கிளம்பினால் இதை பலமாக ஆராய்ந்து முடிவுசெய்ய வேண்டும். முடிவு என்னவானாலுமாகட்டும், இந்த கௌன்ஸில் மனதில் ஸ்திரமாக வைத்துக்கொள்ள வேண்டிய விஷயமென்னவெனில் அங்கத்தினர்கள் தங்களுடைய நன்மைக்காக கௌன்ஸிலில் பங்கெடுத்துக் கொள்ளவில்லையென்றும், யாருக்குத் தாங்கள் பிரதிநிதியாகயிருக்கின்றார்களோ அவர்களுடைய நன்மைக்குத்தானிருக்கிறார்களென்பதேயாகும். இம்மனப்பான்மையையே சட்டசபை கௌன்ஸிலர்கள் உடைத்தாயிருப்பின் இம்மாகாணத்தில் மாகாண சுயாட்சி எவ்வளவு நன்றாக நடைபெறுகிறதென இந்தியாவின் மற்றமாகாணங்களுக்கு காண்பிக்குமென்பதில் சந்தேகமில்லை.

# திருச்சி மருத்துவகுல சங்க புதிய கட்டிடத் திறப்புவிழா.

## தோழர். எஸ். நீலாவதி அம்மையார் திறந்து வைத்தார்.

## தோழர். ராம சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

திருச்சி மருத்துவகுல சங்க கட்டிடத்திறப்பு விழா 1-8-32 தேதி திங்கட்கிழமை மாலை 5-30 மணிக்கு சிறப்பாக நடைபெற்றது. மல்லிய புரத்தில் பொன்னையாஸ்கூலுக்கு அருகாமையில் புதிதாக கட்டப்பட்ட கட்டிட முன்பு கொடிகளால் சிங்காரிக்கப்பெற்று பந்தல் அமைக்கப்பெற்றிருந்தது. மாலை 5-30 மணிக்கு தலைவர்கள் வரவேற்கப்பட்டு ஆசனத்தமர்ந்ததும் தோழர்களான ராமசுப்பிரமணியம், எஸ். நீலாவதி அம்மையார் அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக வரவேற்புப்பத்திரம் வாசித்தளிக்கப்பெற்றது. பின்னர் தலைவர் ராமசுப்பிரமணியம் அவர்கள் முகவுரைப் பிரசங்கத்திற்குப் பின் திருமதி எஸ். நீலாவதி அம்மையார் கட்டிடத்தை திறந்துவைத்து அதன் அவசியத்தைப்பற்றியும் மக்கள் முன்னேரும் வழிகள் பற்றியும் பல உரைகள் பேசினார்கள் அதன் பிறகு தோழர். ஜே. எஸ். ராமானுஜம் பி. ஏ., பி. எல்., அவர்கள் சுயமரியாதை இயக்கங்கண்டவரும், தற்காலம் மேல்நாடு சென்றிருப்பவருமான தோழர். ஈ. வெ. இராமசாமி யார் அவர்கள் படத்தைத் திறந்து வைத்து அவர் செய்திருக்கும் பேருபகாரங்களை விளக்கிக் கூறினார் பின்பு தோழர். கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல். அவர்கள் "சங்கத்தின் அவசியம்" என்பது குறித்தும், தோழர் டி. வி. சோமசுந்தரம் பி. ஏ., பி. எல்., அவர்கள் "தற்கால நிலைமை" என்பது குறித்தும், தோழர் டி. ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் "மருத்துவ குல சங்கமும், வாலிபர் கடமையும்" என்பது குறித்தும், தோழர் டி. எஸ். சஞ்சீவி அவர்கள் "நமது முன்னேற்றம்" என்பது குறித்தும், தோழர் திரவியம் அவர்கள் "சிக்கன வாழ்வு" என்பது குறித்தும், மருத்துவகுல சங்க பொக்கிஷதார் தோழர் எஸ். மருதை அவர்கள் "முன்னேற்றம்" என்பது பற்றியும் பேசினார்கள். பின்பு தலைவர் முடிவுரையில் கடவுள்பேரால் கோயில்கட்டியவர்கள் தற்காலம் என்ன ஸ்திதியிலிருக்கிறார் என்றும், குற்றஞ்செய்தவர்களை கோவிலுக்கு அவசியமாகச்சொல்லுகிறார்களென்றும் ஒரு சமயத்தில் ஆயிரம் ரூபாய் செலவிட்டு சுவாமிக்கு அபிஷேகம் செய்தால் அவர் ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்தத்தகுந்த குற்றவாளியாகிறாரென்றும் ஆரியர்கள் தமிழர்களை எவ்விதம் ஏமாற்றி தங்கள் சூழ்ச்சித்திறமையை நிலை நாட்டியிருக்கிறார்களென்பதையும் விளக்கமாக பேசினார்கள். பின்பு காரியதரிசி ஆர். ராஜகோபால் அவர்களால் வந்தனங் கூறி மாலை சூட்டப்பெற்று இரவு 9-30 மணிக்கு சபை இனிது முடிவுற்றது கற்கண்டு தாம்பூலம் வழங்கப்பெற்றது.

---

## மதுரை ஜில்லா போர்டு தேர்தல்.

### சௌந்திரபாண்டியன் வெற்றி.

சமீபத்தில் நடைபெற்ற மதுரை ஜில்லா போர்டு தேர்தலில் வத்தலக்குண்டு, விராலிபட்டி சர்க்கிளுக்கு அபேட்சகராக நின்ற உயர்திரு. ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் அவர்களுக்கு அதிகப்படியான ஓட்டுகள் பெற்று வெற்றி பெற்றார்.

# குடி அரசு.

ஈரோடு 1932 ஆகஸ்டுமீ 7-உ

## ஸ்தலஸ்தாபனச் சட்டம்.

—:0:—

இப்பொழுதுள்ள "ஸ்தலஸ்தாபனச்சட்டப்படி நகரசபைத்தலைவர்களோ, லோக்கல்போர்டுகளின் தலைவர்களோ, ஒழுங்காக நடந்துகொள்ளாவிட்டால் அவர்கள்மீது உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றவும், நம்பிக்கையில்லாத்தீர்மானம் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்டவுடன் தலைவர்கள் தங்கள் பதவியை இழந்துவிடவும், இடமிருக்கிறது.

"ஸ்தலஸ்தாபனச்சட்ட"த்தில் இத்தகைய பிரிவு ஏற்படுத்தியிருப்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. இது ஸ்தலஸ்தாபனங்களின் நிர்வாகம் ஊழலாகப் போய் விடாமல் திறமையாக நடைபெறவேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் அமைக்கப்பட்டதேயாகும். இப்பிரிவு இல்லாவிட்டால் தலைவர்கள் சிறிதும்பயமில்லாமல் தங்கள் அதிகாரங்களைச் சுயநலத்தின்பொருட்டு துஷ்பிரயோகம்செய்ய இடமேற்படும் என்பதில் ஐயமில்லை. இப்பிரிவு இருந்தால் "ஸ்தலஸ்தாபன"த்தலைவர்கள் தங்கள் பதவியைக்காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டாவது நேர்மையான வழியில் நடந்துகொள்ள வேண்டும் என்று ஞாபகப்படுத்திக்கொண்டேயிருக்கும்.

ஆனால் இச்சட்டம் அமுலுக்கு வந்த சுமார் இரண்டு வருஷங்களாக, பல நகர சபைகளிலும், லோக்கல்போர்டுகளிலும் உள்ள தலைவர்களின் பேரில் நம்பிக்கையில்லாத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. சில "ஸ்தல ஸ்தாபனங்களில்" மற்ற வேலைகளைக்கவனிப்பதற்கு நேரமில்லாமல் சதா நம்பிக்கையில்லாத்தீர்மானங்கள் கொண்டுவருவதும், இருக்கும் தலைவரை விலக்குவதும் வேறு தலைவரைத்தேர்ந்தெடுப்பதும், பிறகு அத்தலைவர் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றுவதும் ஆகிய வேலையே நடைபெற்றுக்கொண்டு வந்திருக்கின்றது நகரசபைக் காரியங்களையும், லோக்கல்போர்டுகளின் வேலைகளையும் ஒழுங்காகவும், திறமையாகவும் நிர்வாகம் புரிந்து வந்த தலைவர்களும் இந்த நம்பிக்கையில்லாத்தீர்மானத்திற்கு இரையாகியிருக்கிறார்கள். ஆகையால் இந்த நம்பிக்கையில்லாத்தீர்மான அதிகாரமானது உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் உள்ள தனிப்பட்ட விரோதங்களினாலும், சம்பந்தத்தினாலும் தலைவரின் நிர்வாகத்திறமையையோ, ஊழலையோ கவனியாது பதவியை விட்டு நீக்கவும் பதவியில் வைத்திருக்கவும் இடங்கொடுக்கிறதென்பதை உணரலாம். இந்தக்காரணத்தை உத்தேசித்து நம்பிக்கையில்லாத்தீர்மானம் சம்பந்தமாகத்திருத்தம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணமும், ஸ்தலஸ்தாபனங்களின் நிர்வாகம் ஊழல்களாகப்போகாமல் இருக்க பாதுகாப்புகள் ஏற்படுத்த வேண்டும் என்னும் எண்ணமும் இச்சட்டம் ஏற்பட்ட நாள்முதலே பலர் மனதில் இருந்து வந்தது. இதற்காகச்சில தனிப்பட்ட சட்டசபை உறுப்பினர்கள் முயற்சி செய்தும் ஒன்றும் நிறைவேறவில்லை.

ஆனால் இம்மாதம் நடைபெறும் சென்னை சட்டசபைக்கூட்டத்தில் முதன் மந்திரியவர்களால் தயாரிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத்தீர்மானத்தைப் பற்றிய திருத்தமொன்று அரசாங்கத்தாரால் கொண்டுவரப்படுமென்று அறிகிறோம். அத்திருத்தத்தில் கீழ்க்கண்ட விஷயங்கள் அடங்கியிருப்பதாகத்தெரிகிறது.

"தலைவர்மீதோ, உபதலைவர் மீதோ நம்பிக்கையில்லாத்தீர்மானம்கொண்டு வரப்படுவதற்கு முன் தீர்மானத்தைக்கொண்டு வருபவர் பத்துநாட்களுக்கு முன் அறிக்கை செய்யவேண்டும்"

"அந்த நம்பிக்கையில்லாத்தீர்மானம் மூன்றில் இரண்டுபங்கு உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டால் தலைவரை அப்புறப்படுத்த அரசாங்கத்தாருக்கு அதிகாரம் உண்டு"

"ஒரே கூட்டத்தில் தலைவர் பேரிலும், உபதலைவர் பேரிலும் நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டுவரக்கூடாது"

"ஒருவரால் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் சபை உறுப்பினர்களால் நிராகரித்துத்தள்ளப்படுமானால் அவர் மீண்டும் ஆறுமாதத்திற்குள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரக்கூடாது"

"நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொஞ்சம் அதிகப்படியான அங்கத்தினர்களின் ஆதரவை மாத்திரம் பெற்று மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினரின் ஆதரவைப்பெறாதிருந்தால் ஆறுமாதங்களுக்குப்பின்னும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு இதேபோன்று நிறைவேறுமானால் தலைவரை நீக்கும் அதிகாரம் அரசாங்கத்தார்க்கு உண்டு"

இத்திருத்தம் நிறைவேறுமானால் ஸ்தலஸ்தாபனங்களின் நிலைமை தற்பொழுது இருப்பதைக் காட்டிலும் கொஞ்சம் மாறுதலடையும் என்று நிச்சயமாக நம்பலாம். தற்பொழுதுள்ள சட்டப்படி தலைவர் மீதும், உபதலைவர் மீதும் ஒரே சமயத்தில் நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டுவர இடமிருப்பதனாலும், அத்தீர்மானம் நிறைவேறிய உடன் தலைவர்கள் தமது பதவியை விட்டு நீங்கவேண்டியிருப்பதனாலும்உண்டாகும் சங்கடங்கள் பல. இச்சங்கடத்தைத் தற்போது கொண்டுவர இருக்கும் திருத்தம் நிவர்த்திக்கிறது என்ற அளவில் திருப்தியடைய வேண்டியிருக்கிறது.

ஆனால் தற்போதுள்ள "ஸ்தலஸ்தாபனச்சட்டம்" நம்பிக்கையில்லாத்தீர்மானம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவைகளின் ஆட்சியோ சமமாக நடைபெறுவதற்குத் தூண்டுகோலாக இருப்பதென்பதே நமது அபிப்பிராயம். இது விஷயமாகத் தற்போதைய சட்டம் அமுலுக்கு வந்த காலத்திலேயே "குடி அரசு" தனது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறது. இப்பொழுதும் அவ்வபிப்பிராயத்தையே வலியுறுத்திக்காட்ட விரும்புகிறோம்.

நமது நாட்டில் அரசியல் வாதிகளாக விளங்குகின்றவர்கள் அனைவரும் அரசாங்கத்தில் புதிய அரசியல் சீர்திருத்தத்தின் பலனாக ஏற்பட்டிருப்பதும், ஏற்படவிருப்பதும் ஆகிய மாதம் 1000, 2000 3000, 4000, 5000, கணக்காக சம்பளமுள்ள அதிகாரப்பதவிகளைப்பெறுவதிலேயே நோக்கமுடையவர்கள் என்பதை நாம் புதிதாக எடுத்துக்காட்டவேண்டியதில்லை. ஆகவே இவ்வரசியல் வாதிகள் ஜனங்களின் ஓட்டுக்களைப்பெற்றுச் சட்டசபைகளுக்குச் செல்லவேண்டுமானால் கிராமத்து ஜனங்களிடம் தங்கள் செல்வாக்கை அதிகப்படுத்திக்கொள்ளவேண்டியிருக்கின்றது. இதற்கு அடிப்படையாக இவர்கள் "ஸ்தலஸ்தாபனங்"களையே வைத்திருக்கிறார்கள்.

"ஸ்தலஸ்தாபனங்" களில் உத்தியோக நியமனங்களும் "கண்ட்ராக்ட்" விஷயமும் அவைற்றின் தலைவர்களுக்கு இருப்பதனால் இவைகளின் தலைமை ஸ்தானத்தைக் கைப்பற்றி மேற்கண்ட அதிகாரங்களை உபயோகப்படுத்திச்சட்டசபைத்தேர்தல்களில் வெற்றிபெற வேண்டுமென்னும் கருத்தைக் கொண்டே அரசியல் வாதிகளெல்லாம் ஸ்தல ஸ்தாபனங்களில் முதன்மையாகக் கவனம் செலுத்திவருகின்றார்கள் என்று கூறலாம்.

இரண்டாவது, ஆயிரக்கணக்கான சம்பள உத்தியோகங்களுக்கு ஆசைப்படாதவர்கள் தங்கள் உற்றார் உறவினர்களுக்கு உத்தியோகம் தேடிக்கொடுக்கவும், கண்ட்ராக்டின் மூலம் பணம் சம்பாதிக்கவுமே "ஸ்தலஸ்தாபனங்"களின் ஸ்தானங்களைக் கைப்பற்ற விரும்புகின்றார்கள்.

இவ்விரண்டு காரணத்தைக்கொண்டுதான் இன்று ஸ்தலஸ்தாபனத்தேர்தலில் போட்டி பலமாக இருக்கின்றது. கேவலம் கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர் பதவி முதல், ஜில்லா போர்டு உறுப்பினர் பதவிவரையில் உள்ள ஒவ்வொரு தேர்தலுக்கும், ஆயிரம், பதினாயிரம், லட்சம் என்ற கணக்கில் ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்றன. "ஆதாயமில்லாத செட்டியார் ஆற்றோடு போவாரா?" என்று கூறும் பழமொழி இந்த ஸ்தலஸ்தாபனங்களில் பணஞ்செலவழிக்கின்றவர்கள் விஷயத்தில் பொருந்தாமல் போகாது.

மற்றபடி ஸ்தலஸ்தாபனங்களின் மூலம் பொது ஜனங்களுக்கு நன்மைகள் செய்யவேண்டும் என்னும் உண்மை நோக்கமுடையவர்களுக்கு இக்காலத்தில் இடங்கிடைப்பது அரிது. "இப்பொழுது தேர்தலில் செலவு செய்யும் பணத்தைப் பிறகு சம்பாதித்துக் கொள்ளலாம்" என்ற தைரியம் உள்ளவர்கள்தான் துணிந்து கணக்கில்லாமல் பணத்தைச் செலவழிக்க முன்வருவார்கள். நாணயமாக நடந்து கொள்ளும் நோக்கம் உள்ளவர்கள் கணக்கற்ற பொருளை வீணாகத் தேர்தலில் செலவு செய்யச் சம்மதிக்கமாட்டார்கள். ஆகவே நாணயமுள்ளவர்கள் ஸ்தலஸ்தாபனங்களில் ஸ்தானம் பெறுவதே முடியாததாகும்.

ஒரு சமயம் நாணயமுள்ளவர்களும், திறமையுள்ளவர்களும், பொதுஜன ஊழியத்தில்உண்மையான விருப்பமுள்ளவர்களும் ஸ்தலஸ்தாபனங்களில் உறுப்பினர் பதவி பெற்றுத் தலைவர்களாகத் தேர்ந்

தெடுக்கப்பட்டாலும், அவர்கள் தங்கள் பதவியின் கௌரவத்திற்கு ஆசைப்பட்டால், நாணயத்தோடும், திறமையோடும் தங்கள் கடமையைச் செய்ய முடியாத நிலைமையிலேயேதான் இருக்க முடியும். ஏனென்றால், "ஸ்தலஸ்தாபனங்"களின் பொருளிலிருந்தே, தங்கள் தேர்தல் செலவை ஈடு செய்து கொள்ளலாம் என்ற நோக்கமுடன் வந்திருக்கும் உறுப்பினர்களுக்கும், தங்கள் செல்வாக்கை உபயோகப்படுத்திப் பணம் சம்பாதிக்கலாம் என்ற நோக்கமுடன் வந்திருக்கும் உறுப்பினர்களுக்கும் சலுகை காட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டே தீரும். இந்நிர்ப்பந்தத்திற்குக் கட்டுப்படாத தலைவர், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் தமது பதவியை இழிக்கவேண்டிய நெருக்கடி ஏற்பட்டு விடும். ஆதலால் தலைவர் பதவிக்கு ஆசைப்படுகின்றவர்கள், சபையின் பெரும்பாலான உறுப்பினர்களை எந்த வகையினாலும் திருப்திப்படுத்தி வைத்திருக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.

இதனால் எவ்வளவு யோக்கியமும், திறமையும் உள்ள தலைவராயிருந்தாலும் அவர் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கவேண்டுமென்று ஆசைப்படுவாரேயானால் ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து அங்கத்தினராய் வந்திருப்பவர்களில் "மெஜாரிட்டி"யாரை ஒழுங்கீனமான வழியில் திருப்தி செய்து வைத்துக்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கின்றார் என்பதை உணரலாம். இந்த நிலைமையை உண்டாக்கி இருப்பது தற்போதுள்ள சட்டமும், நம்பிக்கையில்லாத் தீர்மானமுமேயாகும் என்பதையும் அறியலாம்.

ஆனால், ஸ்தலஸ்தாபனச்சட்டத்தில் நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டுவர இடமில்லாதிருக்குமானால் இத்தகைய ஊழல்களுக்கு இடமுண்டாகாது என்று கூறலாமா? என்றால் இப்படியும் கூற முடியாது. இப்பொழுதாவது, உறுப்பினர்களெல்லாம், உண்மையான பொதுஜன ஊழியர்களாயிருந்தால், யோக்கியமுள்ள தலைவரை வைத்திருக்கவும், யோக்கியப் பொறுப்பில்லாத தலைவர்களைப் பதவியை விட்டு நீக்கவும் அதிகாரமிருக்கின்றது. நம்பிக்கையில்லாத்தீர்மானம் இல்லாவிட்டால், ஒழுங்கீனமாக நடந்து அதிகாரத்தைத் துஷ்பிரயோகஞ் செய்யும் தலைவர்கள், எந்த வகைக்கும் பயமில்லாமல், தற்போதுள்ள சட்டப்படி தலைவர் பதவி யேற்ற மூன்று வருஷம் வரையிலும் தமது விருப்பம் போல் தாராளமாக நடக்க இடங்கொடுக்குமாதலால், "ஸ்தலஸ்தாபனங்"களின் நிர்வாகமானது தற்பொழுது இருப்பதைக்காட்டிலும் இன்னும் படுமோசமாகப் போய்விடும் என்பதில் ஐயமில்லை. ஆகையால் நம்பிக்கையில்லாத்தீர்மானம் அவசியம் இருந்துதான் தீரவேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம்.

இப்பொழுது "ஸ்தலஸ்தாபனங்"களில் உள்ள ஊழல்கள் ஒழிந்து, அவைகளின் ஆட்சி, திறமையாகவும், பொதுஜனங்களுக்குப் பயன்படும்வழியிலும் நடைபெறவேண்டுமானால் அவைகளுக்கு ஒவ்வொன்றும் தனித்தனியே ஒரு நிர்வாக அதிகாரியை நியமனம் பண்ணி, அவற்றின் காரியங்களை நடத்தும் உரிமையை அந்த உத்தியோகஸ்தரிடம் விட்டுவிட்டால் போதுமானதாகும் என்பதே நமது நோக்கமாகும். அதாவது, இப்பொழுது சென்னை நகரசபைக்குக் "கமிஷனர்" என்று ஒரு நிர்வாக அதிகாரி இருப்பது போல ஒவ்வொரு "முனிசிபாலிட்டி"களுக்கும், "தாலூகா போர்டு"களுக்கும், "ஜில்லா போர்டு"களுக்கும், அதனதன் வரவுசெலவுகளுக்கும், நிர்வாகத்துக்கும் தகுந்த யோக்கியதையில் ஒவ்வொரு நிர்வாக அதிகாரியை நியமிக்கவேண்டுமென்பதே நமது அபிப்பிராயம். இப்பொழுது சென்னை நகரசபையில் அதன்நிர்வாக காரியங்களை நடத்த "கமிஷனர்" என்னும் நிர்வாக அதிகாரி இருப்பதனால் தான் அங்கத்தினர்கள் ஒருவர்க்கொருவர் எவ்வளவு தான் அரசியல் விஷயமாகவும், வகுப்பு சம்மந்தமாகவும் விரோதம் பாராட்டிக்கொண்டாலும், அதன் நிர்வாகம் திறமையாக நடந்து வருகின்றது என்பதில் ஐயமில்லை. இவ்வாறில்லாவிட்டால் பெரிய நகரமாகிய சென்னையும் மற்ற—அங்கத்தினர்களும், தலைவர்களும், சண்டைபோட்டுக் கொண்டிருக்கின்ற நகரசபைக்கும் உட்பட நகரங்களும் லோக்கல் போர்டுகளுக்கு உட்பட்ட ஊர்களும் கஷ்டப்படுகின்றமாதிரி கஷ்டப்படவேண்டியதுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆகையால் இதுபோலவே, "ஸ்தலஸ்தாபனங்களுக்கும்" நிருவாக அதிகாரிகள் என்பவர்களை ஏற்படுத்தி விட்டால் அவைகளில் உத்தியோக நியமனங்கள் சம்பந்தமாகவும், கண்ட்ராக்ட் சம்மந்தமாகவும் தற்பொழுது நடைபெறும் ஊழல்கள் நடைபெற இடமே ஏற்படாது. ஸ்தலஸ்தாபன உத்தியோகஸ்தர்களும் அங்கத்தினர்களின் தயவுக்கும், சலுகைக்கும் கட்டுப்பட்டு ஒழுங்கீனமான வழியில் நடந்துகொள்ள வேண்டிய நிலைமைமாறி, யோக்கியர்களாகவும், தங்கள்கடமையைத் திறமையோடு செய்யக் கூடியவர்களாகவும் நடந்து கொள்ள முடியும். இதனால் நிர்வாகம் மிகவும் உயர்வுடையதாகவும் இருக்கும்.

அடுத்தபடியாக "ஸ்தலஸ்தாபனத்தேர்தல்க"ளில் அங்கத்தவர்கள் ஏராளமாகச் செலவழிப்பதும் ஒழியும். கூடிய வரையிலும், உண்மையான பொதுஜன ஊழியர்களும், யோக்கியர்களும், கல்வியறிவுடையவர்களும் ஸ்தல ஸ்தாபனங்களில் பதவி பெறுவார்கள்.

இதனால் "ஸ்தல ஸ்தாபனங்"களில் மோகமுள்ளவர்கள் "இவ்வாறு செய்வதனால் ஜனநாயகத்தன்மை போய்விடுகிறது" என்று நொண்டிவாதம் கூறுவார்கள். இதனால் ஜனநாயகத்துவம் போய்விடவில்லையென்பதே நமது அபிப்பிராயம். "நிர்வாக அதிகாரி" அந்த ஸ்தாபனத்திற்கு நியமிக்கப்பட்ட ஊழியரே தவிர யதேச்சாதிகாரியல்லர். தலைவரும், அங்கத்தவர்களும் யோசித்துச் செய்யும் தீர்மானங்களின்படிதான் "நிர்வாக அதிகாரி" காரியங்களை நடத்திச்செல்லுபவரே யொழிய வேறு அவராக ஒன்றும் செய்வதற்கு அதிகாரமில்லை. அன்றியும் இவ்வதிகாரிகளைநியமிக்கும் அதிகாரம் ஜனப்பிரதிநிதிகளின் தலைவர்களான மந்திரிகளுக்கு ஏற்படுகிறது. இதனால் ஜனநாயகத்துவத்திற்கு விரோதமானசங்கதியும் ஒன்றுமில்லை என்று இதனால் அறியலாம். இம்மாதிரி நிர்வாக அதிகாரியை நியமிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டால்தான் தற்போதைய ஸ்தல ஸ்தாபனச்சட்டம் ஒழுங்குபெற நடைபெறும் என்பதை எடுத்துக்காட்டவே இவ்வளவுதூரம்கூற முன்வந்தோம். இந்த முறையில் சட்டத்தைத் திருத்த முயற்சி செய்வதே உண்மையான ஜனாபிமானிகளின் கடமையாகும். இல்லாதவரையில் சுயமரியாதையும், நாணயமும், திறமையும் உள்ளவர்கள் யாரும் ஸ்தலஸ்தாபனங்களில் அங்கம் வகிக்கவும், தலைமை வகிக்கவும், இவைகளின் மூலம் தேச மக்களுக்கு நன்மை செய்யவும் இடமில்லையென்றே கூறுகின்றோம். இதற்கு உதாரணம் வேண்டுமானால் தற்பொழுது "ஸ்தலஸ்தாபனங்"களில் விரல் விட்டு எண்ணக்கூடிய சில ஸ்தாபனங்களே நாணயமான தலைவரைப்பெற்று ஒழுங்காக நிர்வாகம் நடத்திக்கொண்டு செல்லுகின்றனவே தவிர நாணயமும், நிர்வாகத்திறமையும் உடைய தலைவர்கள் பலர் நம்பிக்கையில்லாத் தீர்மானங்களால் விரட்டியடிக்கப்பட்டதையும் ஒழுங்கீனமும், சக்தியில்லாமையும் உடையவர்கள் பலர் தலைவர்களாக இருப்பதையும் நினைத்துப்பார்த்துக்கொள்ளவேண்டுகிறோம்.

ஆனால் இப்பொழுது "நிர்வாக அதிகாரி ஏற்படுத்த வேண்டும்" என்னும் நமது கொள்கைக்கு எதிர்ப்பு இருந்தாலும் இவைகளின் ஊழல்கள் இன்னும் அதிகமாக அதிகமாகக் கடைசியில் உண்மையான ஜனசமூக ஊழியர்கள் இம்முடிவுக்கே வந்து தீருவார்களென்பதில் நமக்கு நம்பிக்கையுண்டு.

---

## ஏழைகள் கண்ணீர்.

---

தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரநெருக்கடியினாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாகிப் பரதவிக்கும் மக்கள் ஏழைமக்களே யாவார்கள். அதிலும், தொழிலாளர்கள் படும்துயரத்தைச்சொல்லத் தரமன்று, ஒவ்வொரு யந்திரசாலைகளிலும், தொழிற்சாலைகளிலும், வேலையாட்களைக்குறைத்துக்கொண்டே வருவதன்மூலம் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் வேலையற்றவர்களாக வெளியேறுகின்றனர்.

நமது நாட்டுத் தொழிலாளர்கள் பெரும்பாலும், அனேகமாக எல்லோருமே, தினச்சம்பளம் பெறுகின்றவர் களாயிருந்தாலும், வாரச்சம்பளம் பெறுகின்றவர்களாயிருந்தாலும், மாதச்சம்பளம் பெறுகின்றவர்களாயிருந்தாலும் அவர்கள் அந்தக் கூலியைக்கொண்டு ஜீவனஞ்செய்கின்றவர்கள்தான் என்பதை நாம்சொல்ல வேண்டியதில்லை. இதைத்தவிர அவர்களுக்கு வேறு பூஸ்திதியோ, ரொக்கப்பணமோ இல்லை. அனேகர், குடிஇருக்கவும் சொந்தக்குடிசையில்லாமல், குடிக் கூலிக்கு வாழ்ந்து வருபவர்கள். இத்தகைய நிலையில் உள்ளவர்களைத் திடீரென்று, வேலையும் இல்லை யென்று வீட்டிற்குப்போகச்சொல்லி விட்டால், அவர்களின்கதி என்னவது என்று கேட்கின்றோம், எங்கும்

பணப்பஞ்சம் மக்களை வாட்டுகிற காலத்தில் அவர்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்றுவது எப்படி?

இன்று, பணக்காரர்களோ, நிலச்சுவான்தார்களோ, முதலாளிகளோ, மற்றும் யாராயிருந்தாலும் அனைவரும் சௌக்கியம் அனுபவிப்பதற்குக் காரணமாயிருப்பவர்கள் ஏழைத்தொழிலாளர்கள். நாட்டில்தொழில்கள்வளர்ச்சியடைவதற்கும், வியாபாரம் வளர்வதற்கும் காரணமாயிருப்பவர்கள் ஏழைத்தொழிலாளர்கள். இருந்தும் அவர்கள் நிலை என்ன? இருக்கஇடமில்லாமலும், உடுக்க உடையில்லாமலும், உண்ண உணவில்லாமலும், பெண்டு பிள்ளைகளுடன் பட்டினி கிடந்து நோயால் வருந்திப் பரிதவிப்பதுதான் அவர்கள் கண்டபலன்.

இன்று ஒவ்வொரு ரயில்வேக் கம்பெனிகளிலும் ஆட்களைக் குறைத்து வருவதுடன், இன்னும் குறைப்பதற்கும் திட்டம் போட்டு வருகிறார்கள். இதுபோலவே அரசாங்கத்தின் அதிகாரத்தில் உள்ள தொழிற்சாலைகளிலும், தனிப்பட்ட முதலாளிகளின் ஆதிக்கத்தில் உள்ள தொழிற்சாலைகளிலும் ஆட்களைக்குறைத்து வருகிறார்கள். ஆனால் இக்கம்பெனிகளிலும், தொழிற்சாலைகளிலும், உள்ள ஆயிரம் இரண்டாயிரம் என்று சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களைக் குறைக்கக்காணோம். ஏழைத்தொழிலாளர்களின்வயிற்றில் மண்போட்டு, பெரிய உத்தியோகஸ்தர்களின் பணப்பெட்டிகள் நிரப்பப்படுகின்றன.

தொழிலாளர்களைக் குறைப்பதைக்காட்டிலும், தொழில் நேரத்தைக்குறைத்து விடுமுறை நாளை அதிகப்படுத்தி, சம்பளத்தைக் குறைத்துக் கொடுப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலையில்லாத்திண்டாட்டம் ஏற்படுவதை தற்கால சாந்தியாக நிவர்த்திக்கலாமென்று தொழிலாளர்களின் தலைவர்கள் சிலர் கூறும்யோசனை சிறந்த யோசனையேயாகும். இந்த யோசனைக்கு ஏனைய தொழிலாளர்களும் சம்மதிப்பதாகவும் அறிகின்றோம். இவ்வாறு செய்வதனால், தொழிலாளர்கள் அரைவயிற்றுக்கஞ்சியாவது குடித்துக் கொண்டிருக்க முடியும். இந்த முறையையாவது, தொழிலாளர்களைக்குறைத்துதான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகும் கம்பெனிகளும், அரசாங்கமும், முதலாளிகளும் கைப்பற்றுவார்களானால் ஒருவாறு தற்சமயம் அவர்கள் துயரம்நீங்கும் என்றே கூறலாம். ஆனால் இது நிறைவேறுமா என்றுதான் கேட்கின்றோம்.

"சுயராஜ்யத்திற்கு" என்றும் "சுதேசி" க்கு என்றும், "பொதுப்பாஷை" க்கு [ஹிந்தி] என்றும் கூச்சல் போட்டு தேசாபிமானிகளாக விளங்குகின்றவர்கள் யாரும் ஏழைத்தொழிலாளர்கள் விஷயத்தில் ஒன்றும் கவலையெடுத்துக் கொள்ளக்காணோம். அரசாங்கமும் அவர்கள் துயரை நீக்கமுன்வருவதைக்காணோம். இந்த நிலையிலேயே தொழிலாளர் துயரமும், வேலையில்லாத்திண்டாட்டமும் வளர்ந்து கொண்டேபோகுமானால் கடைசியில் பெரும் ஆபத்தாக முடியுமென்று எச்சரிக்கை செய்கின்றோம். ஆகையால் இப்பொழுதே, முதலாளிகளும், மாகாண அரசாங்கங்களும், இந்திய அரசாங்கமும், தொழிலாளர்களின் துன்பத்தை நீக்கத்தாமதமின்றி முயற்சியெடுத்துக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

## சௌந்திரபாண்டியன் வெற்றி.

:0:

சமீபத்தில் நடைபெற்ற மதுரை ஜில்லா போர்டு தேர்தலில் நமதியக்கத் தோழர் சௌந்திரபாண்டியன் அவர்கள் பெருவாரியான ஓட்டுகள் பெற்று வெற்றி பெற்றதறிய அளவிலா மகிழ்ச்சியடைகிறோம். பொது ஜன சேவையில் ஆர்வமும், ஊக்கமும், செல்வாக்குமுள்ளவர்பலர் வெளியே தங்கிவிடுவதும், தன்னலமும், வைதிகப்பித்தும் கொண்ட சிலர் அங்கம் பெற்று பொதுநலத்தொண்டை அறவே மறந்து சுயநலமே கருத்திருத்தி பணியாற்றுவதும் இப்போதையஸ்தலஸ்தாபனங்களின் இயற்கையாய் போய் விட்டது.

நமது தோழர் சௌந்திரபாண்டியன் அவர்கள் முன்னர் ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவராய் இருந்து ஆற்றி வந்த பொதுநல சேவையையும், தாழ்த்தப்பட்டார் விஷயத்தில் காட்டி வந்த அநுதாபமும், வெறும் ஏட்டுச்சுரைக்காயாய் போய் விடாமல் அவைகளை சட்ட மூலமாய் அமுலுக்குக் கொண்டுவருவான்வேண்டி எடுத்துக்கொண்ட பெருமுயற்சிகளும், தமிழ் நாட்டார் இதற்குள்ளாக மறந்திருக்கமாட்டார்களென்றே நம்புகிறோம். பொதுவாக மதுரை ஜில்லா வாசிகளும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமூகத்தாரும் தங்கள் தங்கள் நன்மைக்காக கடைசி வரை வாதாட ஒரு உண்மையும், ஊக்கமும், உறுதியும் கொண்ட இத்தகைய ஒரு அங்கத்தினரை பெற்ற பெருமைக்கு உரித்தாவர்களென்றே எண்ணுகிறோம்.

வெற்றி பெற்ற நமதியக்கத் தோழர் சௌந்திரபாண்டியன் அவர்களுக்கு நமது மகிழ்ச்சியுரியதாகுக.

## கோவை சுயமரியாதை வலிபர்சங்கம்.

### லர். தியாகராயர் வாசக சாலைத்திறப்பு விழா.

### தலைவர்களுக்குப்பாராட்டு.

31-7-32 நாள் ஞாயிறன்று மாலை 6 மணிக்கு கோவை முத்தண்ணன் குளத்து வீதியிலிருக்கும் ஷை சங்கப் புதுக்கட்டிடத்தில் சங்க ஆதரிப்பாளராக இருக்க அன்புடன் ஏற்றுக் கொண்ட தோழர்களான கோவைப் பிரபலஸ்தர்கள் வி. வெரிவாடய்யா அவர்கள் பொருளாளர், பெருநிலக்கிழவர், எஸ். ஏ. பென்னையா அவர்கள், கோவை நகராண்மைக் கழக உறுப்பினர், ஜில்லாபோர்டு துணைத்தலைவர், எம் பரமேஸ்வரம் அவர்கள் நகராக்ஷிக்க உறுப்பினர் ஏ- கிருஷ்ணசாமி பி. ஏ. அவர்கள் பொருளாளர், பெருநிலக்கிழவர் ஆகியவர்களைப் பாராட்டி உபசரிக்கு முகத்தானும், அச்சங்கத்தாதரவில் லர். தியாகராயர் வாசகசாலை யொன்று காணு முகத்தானும் ஓர் பொதுக் கூட்டம் கூடியது. தோழர்களான நாகசுரவித்வான் நாச்சிமுத்து அவர்கள் தவுல்வித்வான் சின்னக்கண்ணு அவர்கள் ஆகியவர்களின் அரிய வாத்திய கோஷிப்புக் கிடையே தலைவர்கள் வரவேற்கப்பட்டனர். சங்கத்துள்ளும், புறம்பும் பலவித ஜோடிப்புகளுடனும் சுயமரியாதை உணர்ச்சியூட்டும் அரிய சொற்றொடர்கள் தீட்டப்பெற்ற அட்டைகள் த்கரங்களுடனும், தலைவர்கள் படங்களுடனும் மிளிர்ந்தது தோழர்கள் எம். ஜி. புண்ணியகோடி முனிசிபல் ரிவின்யூ ஆபீசர் கே. பெண்ணுசாமி, ஜவுளி வியாபாரம், சி. பி. முத்துசாமி பி. ஏ. கே. இராமசாமி, நாராயணகவுண்டர் ஆர். நஞ்சையா முனிசிபல் கவுன்சிலர், எம். சின்னசாமி முதலிய பல குறிப்பிடத்தக்க பெரியார்களும் கூட்டத்தில் காணப்பட்டனர். சுமார் 150 பேர் சங்க ஹாலில் இருக்க. இடமின்றிப் பலர் வெளியிலும் நிற்க நேரிட்டது பின்னர் எல்லொருக்கும் சிற்றுண்டி யளிக்கப்பட்டது.

பின்னர் தோழர் வி. வெரிவாடய்யா அவர்களை அக்கூட்டத்துக்குத்தலைமை வகிக்குமாறு தோழர் ஏ. ஆர். சிவானந்தம் அவர்கள் பிரரேபிக்க, தோழர் ஆர். கிஸன் அவர்கள் ஆமோதிக்க அவர்கள் தலைமை யேற்றார். தோழர். ஏ. ஆர். சிவானந்தம் (சங்கத்தலைவர்) அவர்களால் தோழர்களான வி. வெரிவாடய்யா அவர்கள் எஸ். என். பொன்னையா அவர்கள், எம். பரமேஸ்வரம். அவர்கள் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் ஆகியவர்களுக்கு உபசாரப்பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப் பட்டன. சங்க அங்கத்தினர்கள் சார்பாக சங்கத்தலைவர் அவர்கள் சென்ற ஆண்டில் தலைமை பூண்டாற்றிய அருஞ்சேவைப்பாராட்டிக் காரியதரிசி ஆர். கிஸன் அவர்களால் அவருக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டு அனைவரும் மாலை சூட்டப்பட்டனர்.

உபசாரத்தாள்களுக்குப் பதிலளித்து விட்டுத்தோழர் வி. வெரிவாடய்யா அவர்கள் லர் தியாகராயர் வாசகசாலையைத்திறந்து வைத்தார். பின்னர் மற்றவர்களும் பதிலளிக்கையில் சங்கத்தை வலுப்படுத்தி அதன் கொள்கைகளைப் பரப்புவதில் சங்கத்தார் பெரிதும் முயலவேண்டு மென்றும் அதற்காகத் தம்மாலான சகல உதவிகளையும் செய்யத் தாங்கள் என்றும் தயாராய்க்காத்திருப்பதாகவும் உறுதியளித்தது பாராட்டக்கூடிய தென்பதோடு இது சங்க வளர்ச்சிக்கு ஓர் நற்குறியென்றே கருதவேண்டியதாயிருக்கின்றது.

காரியதரிசியால் அனைவர்க்கும் வந்தனங்கூறப்பட்டு இரவு 9 30 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது கூட்டம் முடிந்த உடனே அங்கேயே சுமார் 20 புது அங்கத்தினர்கள் சேர்ந்தனர். இன்னும் அதிக அங்கத்தினர்கள் சேருவார்கள் என்னும் குறியும்காணப்படுகின்றது.

(ஒரு நிருபர்.)

## ஈரோடு முனிசிபாலிட்டி. விளம்பரம்.

ஈரோடு முனிசிபல் சங்கத்தார் தங்களுக்கு பாத்தியப்பட்ட டி. எஸ். நெ. 2853-1ல் 1500 சதுர அடி நிலத்தை கோட்டை சக்கிலியத் தெருவிலிருக்கும் ஜோபு அகஸ்தியனுக்கு தர்க்காஸ்தில் கொடுப்பதாக 13—[illegible]—32 தேதிய 162 நெ. தீர்மானத்தில் முடிவு செய்திருக்கிறார்கள்.

இது விஷயமாய் ஆக்ஷேபணையுள்ளவர்கள் ஈரோடு முனிசிபல் சேர்மன்அவர்களுக்கு எழுத்து மூலமாய் இந் நோட்டீஸ் ஜில்லாகெஜட்டில் பிரசுரம்செய்த இரண்டு வாரத்திற்குள் தெரியப்படுத்த வேணுமாய் இது ஜனங்களுக்குத்தெரிவிக்கப்படுகிறது.

(ஒப்பம்) கே. ஏ. ஷேக்தாவுத்,
சேர்மேன்.

ஈரோடு முனிபல் ஆபீஸ்,
23—7—32

டாக்டர் சிங்காரம்
அவர்களின் மிகவும் குணமுள்ள
# கெந்தக நெய்

சாஸ்திரமுறைப்படி தயார் செய்யப்பட்டது
சிறுபிள்ளை முதல் சாப்பிடலாம்
இம்மருந்துக்கு யாதொரு பத்தியமில்லை

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேக ஊரல், தடிப்புடன், கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வலிகுன்மம், கிரந்தி, குஷ்டம், லிங்கப்புற்று, சூலை, கணுச்சூலை, பாரிச்வாய்வு, முடக்குவாய்வு, சர்மத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை, கால், பிடிப்பு, மதமதப்பு, திமிர்வாய்வு, புண், புரைகள், ஆராதரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின. நோய்களை குணம் செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித துர்நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக்கொடுக்கும்.

60 வேளை மருந்து விலை ரூ. 10—0—0
20 ,, ,, 4—0—0

உபயோகித்தவர்கள் சொல்வதைக் கவனியுங்கள்.
K. சீனிவாசராவ் அவர்கள் நேடிவ் டாக்டர், ஆஞ்சநேயவிலாஸ் மெடிக்கல் ஹால், அக்கரை கோட்டகம், தஞ்சாவூர்.

தாங்கள் அனுப்பிய கெந்தக நெய்யை உள்ளுக்குச்சாப்பிடவும் மகா சந்தனாதித்தைலத்தை ஸ்நானம் செய்யவும் எஸ். முருகேசன் என்பவருக்கு கொடுத்தேன் அவருக்கு ஒரு வருஷ காலமாக தேக முழுவதும் ஒரு பைசா பிரமாணம் வட்டம் வட்டமாய் செம்மேக தடிப்புகள் இருந்ததும், அதில் நீர்வடிகிறதும், துர் நாற்றம் வீசுகிறதும் பார்ப்பவர்களுக்கு அருவருப்பை உண்டு பண்ணுகிறதுமாய் இருந்தது. அநேக இங்கிலீஷ், தமிழ், யூனானி முதலிய பலவித மருந்துகள் சாப்பிட்டும் குணமடையாது கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தவர் மேல்கண்ட தங்கள் மருந்துகளை உபயோகித்த 15 தினத்திற்குள் அவருக்கிருந்த கடுமையான வியாதிகளெல்லாம் பூரணசுகமானது. அதனால் தங்கள் மருந்துகளின் பெருமையும் என் பெயரும் இவ்விடத்தில் விளங்கி வருகிறது.

மு. சத்தியதாஸ், மெடிகல் எவான்சலிஸ்ட்,
கல்லடிபட்டி, மதுரை.

தங்களின் கெந்தக நெய்யால் மானாமதுரை குஷ்டரோக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறமுடியாமல் திருப்பி அனுப்பி விடப்பட்ட நோயாளியின் செம்மேக வியாதியைப் போக்கி நல்ல சுகத்தைக் கொடுத்தது. தங்கள் மருந்து மிகவும் சிறந்ததென்று என் வைத்திய அனுபோகத்தில் அறிந்து தங்களுக்கு என் நன்றியறிதலான வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம், மலாய் நாட்டுவாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.
விலாசம் தெரிவித்தால் முழுவிபரமடங்கிய கேட்லாக் அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

நீக்கப்போகிய புண்ணியமுள்ளதென்று ரோமைக் குருமார் போதித்தார்கள். அவைகள் தான் மிகுதியான விபசாரத்துக்குக் காரணமானது. இவைகளைப்பற்றி அக்காலத்துச் சரித்திரக்காரரெழுதியிருக்கிறார்கள். ஐயப்படுபவர்கள் சரித்திரங்களை ஆராய்ந்து பார்ப்பதே தகுதி. குருமார் வைப்பாட்டி வைத்திருக்கலாமென்று, பாப்புமார் காலத்துக் காலம் உத்திரவு பண்ணியிருக்கிறார்கள். "1484ம் ஆண்டு பாப்பு பட்டத்துக்கு வந்த இன்னோசன் என்பவர் பேர்பெற்ற விபசாரி. அவருக்குப்பின் பாப்புவான அலக்குசாந்தர் சகல வேசித்தனத்திலும் அசுத்தத்திலும் மிருகத்தன்மையானவர். இன்வெஸ்சுரு Infessura] என்னும் சரித்திரக்காரன் சொல்வது மிகுதியான ரோமைக்குருமாருக்கு வைப்பாட்டியிருந்தார்கள். ரோமைப்பட்டணத்திலுள்ள சகல கன்னியாஸ்திரி மடங்களும் வேசிகள் குகையாயிருந்தது என்கிறார். கன்னியாஸ்திரி மடங்களில் பலமுறையுமிப்படித் தீமைகள் நடக்கிறதென்பதைக் காலாகாலங்களில் கத்தோலிக்க அரசாட்சியாரு மறிந்து அக்கூட்டங்களைக் குலைத்து கட்டிடங்களை அரசாட்சியாயிருக்கப்பிடித்து அவைகளை பள்ளிக்கூடங்களாகவும் மறியல் வீடுகளாகவும்மாற்றினார்கள். சுவர்களை இடித்தபோது அதிலே முப்பது நாற்பதுக்கணக்காய் சிறுபிள்ளைகளின் எலும்புக்கோர்வைகள் காணப்பட்டன. இவைகள்நிஜமான காரியங்கள். கன்னியாஸ்திரி மடங்களிலே பெண்பாடசாலை யிருப்பதுண்டு. அனால் கன்னியாஸ்திரிகளுடைய அறைக்குள்ளே எந்த பெண்பிள்ளைகளும் ஒருக்காலும் போகப்படாதென்பது திட்டமான கட்டளையாம், அவர்கள் கொம்பியாரிக்கிற குருமார் மாத்திரம் போகலாம், பெண்பிள்ளைகளும் போகக்கூடாதென்பதின் கருத்தென்ன, புத்தியுள்ளவன் யோசிக்கட்டும், மோசம் வந்தகாலத்தில் பெறலாம். கொல்லலாம், அடக்கம் பண்ணலாம், உலகம் அறியமாட்டாதென்பதல்லவே? இவைகள் இப்படித்தான் என்பதைக்கன்னியாஸ்திரி மடங்களில் ஒரு முறை இருந்து பின்பு ஓடித்தப்பினவர்கள் சொல்வதனாலறியலாம். காலத்துக்குக்காலம் ஓடித்தப்பினவர்கள் எழுதின புத்தகங்கள் பலவிருக்கின்றன" என்பதும் இன்னும் ஓர் கத்தோலிக் குருக்கள் ஒருவர் எழுதிய "பாவசங்கீர்த்தனத்தினால் உண்டாகும் விபசாரம்" என்னும் நூலில் [இந்நூல் அறிஞர் ஒருவரால் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப் படுகிறது. கூடிய சீக்கிரம் வெளிவரும்] என்னும் கடவுள் வாக்கால் விபசாரம் பெருவதைக்காணலாம்.

இந்து மதத்தில் ஒருபிரிவான காசிலியர் மதத்திலுள்ளோர் மனிதசஞ்சாரமில்லாத ஓரிடத்தில் தங்களின் கடவுள் வார்த்தைப்படி ஆண்களும் பெண்களும் இரவில் கூடி தங்கள் கடவுளாகிய லக்ஷிமிதேவிக்கு மதுமாமிசமிட்டு பூசிப்பதோடு, தம்கோஷ்டியைச் சார்ந்த ஸ்திரிகளுடைய இரவிக்கைகளை கழற்றி மஞ்சள் நீர்நிறைந்த ஓர் தொட்டியிற் போட்டு அந்த இரவிக்கைத்துணியை ஆண்பிள்ளைகள் எடுக்கவேண்டும். எந்த மனுஷனுக்குக் எவளரவிக்கை கிட்டுகிறதோ அப்பெண் அந்த

"மனுஷனுக்கு" இந்த இரவு முழுவதும் சொந்தமான ஸ்திரியாக அவனோடு இன்பமெய்த வேண்டுமாம். இதற்கு இரவிகலு பூஜை என்றுபெயர். இத்தகைய பூஜைகள் எம் திருநெல்வேலி ஜில்லாவிலே சிலஆண்டுகளுக்கு முன்னரே நடந்தது என்றும், சீர்திருத்தை வக்கட்சியைச் சார்ந்த சில உயர் தரக்குடும்ப இளவிதவைப்பெண்கள் இக்குழுவில் சேர்ந்திருந்ததாக நம்பிக்கை வாய்ந்த தோழர்கள் மூலமாயறிகிறோம். இன்னும் ஓரிசா முதலிய விடங்களிலுள்ள ஹிந்துக்கள் சில தேவதைகளை திருப்திப்படுத்தும் பொருட்டுத் தங்களுக்குப்பிறக்கும் பெண்குழந்தைகளிலொன்றை கோயிலுக்கு கடவுளின் பொருட்டு கொடுத்து விடுகிறோம். எனப்பிரார்த்தனை புரிந்து சங்கீதமும், நாட்டியமும் கற்பித்து தக்கபருவத்தில் கோயிலில் கொண்டு போய்விட்டு விடுவார்களாம். இத்தகைய வழியை தமிழ்நாட்டிலுள்ள சைவர்களும் பின்பற்றி வந்ததினாலே நம் நாட்டிலே தேவதாசி என்றொரு சமூகம் பெருகி விட்டது. இச்சமூகத்தாலே மக்கள் எய்தும் துன்பமும், நாடு அடையும் அவமானமும் அளவிட்டுரைக்க முடியா. திருவிழா! திருவிழா!! என நாடெங்கும் நடைபெற்றுவரும் ஏமாற்றுக் கூட்டத்தைப்பார்ப்பதற்காக யுவர்கள் அறியாமையால் சென்று இவ்வேசையர்கள மயக்கினில் வீழ்ந்து புண்ணும், பொடியும், மேகமும், அரையாப்பும் பெற்று அல்லலுறுவதோடு சில பணக்காரரான யுவர்கள் திருவிழாப்பார்க்கச்சென்றால் ஆங்குள்ள புரோகிதர்கள், முதலாளி அவர்களே! மெத்தையில்போய் சௌகரியமாய் படுத்துக்கொள்ளுங்கள். ஆச்சியம்மாள் (60 வயதுடைய ஐயரின் பதினாறு வயதுடைய மனைவி) உங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வாள்நான் கோயிலுக்குபோய் விட்டு விடியற்காலந்தான் வருவேன் என்று கூறிச் செல்வதும், இரவில் அய்யர் மனைவி முதலாளிக்குப் பிரியமான எல்லா உபசாரமும் புரிந்து நூற்றுக்கணக்காகவோ, ஆயிரக்கணக்காகவோ ரூபாய்களை பரித்துக்கொள்வதும் இப்பொழுதுள்ள புண்யஸ்தலங்களில் நடைபெற்றுவரும் விபசார விழாவைப்பற்றி எம் அருமைத் தோழர் அ. பகவதி ஆதித்தர்போன்ற அன்பர்கள் மிகுந்த ஆதாரத்துடன் உலகிற்கு வெளிப்படுத்தி வருகிறார்கள், இன்னும் ஏரல், திருச்செந்தூர், குரங்கணி முதலிய கோயில்களில் நடைபெறும் கூட்டங்களில் நடைபெறும் விபசாரக்கூத்துக்களை கூறவே வெட்கமாயிருக்கிறது. இன்னும் கடவுள் வாக்கின்மேல் கொண்ட நம்பிக்கையினாலன்றோ மலையாள நாட்டில் பார்ப்பான் நாயர் ஜாதியைச்சேர்ந்த ஒருவன்மனைவியைத் தனது சொந்த சொத்துப்போல் எண்ணி நடந்துகொள்ள நாயர் ஜாதி புருஷனே இடங்கொடுப்பதும், பல உயர்ந்த நாயர்குடும்பங்களில் பிறமனிதரிடம் தங்களுடைய குடும்பத்தின் சொத்து, தயாளகுணம், கல்வித்தேர்ச்சி முதலியவற்றைக் கூறுவதோடு எங்கள் குடும்பப் பெண்களுக்கு இன்னவூரிலுள்ள இன்ன நம்பூதிரி பார்ப்பானுடைய சம்ஸர்க்கமும் உண்டு என்று பெருமையாகக் கூறுவதுமுண்டு. பண்டைக்காலத்திலே பல அரச குடும்பங்களில் குழந்தையில்லாதிருந்தால் அக்குடும்பப் புரோகிதனை பார்ப்பான் போய் குழந்தையில்லாத பெண்ணோடு போய்ச்சேர்ந்து குழந்தை உற்பத்தி செய்திருக்கின்றார்கள். தசரதசக்ரவர்த்திக்கு அவ்வாறே ஒரு முனிவரால் குழந்தைகள்உற்பத்தி செய்யபட்ட விபரம் அறிஞர் சந்திரசேகரப்பாவலர் அவர்களால் எழுதிய இராமாயண ஆராய்ச்சியிற்கண்டுதெளிக.

(தொடரும்.)

---

[7-ம் பக்கம் பார்க்க]

ற மனிதர்களிடம் துவேஷமோ, வெறுப்போ பாராட்டாதீர்கள், என்று சுயமரியாதை இயக்கம் கூறுகிறது. இது நாஸ்திகமா?

வேலை செய்யாமல் சோம்பேரியாக உட்கார்ந்து கொண்டிருக்கின்ற மனிதன், பணக்காரனென்றும், ஜமீன்தாரனென்றும், பெயர் வைத்துக் கொண்டு ஏழை மக்களைக்கொடுமைப் படுத்துவது நியாயமல்ல. அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வேலை செய்யும் ஏழைகள் அரைவயிற்றுச் சோற்றுக்கும் வழியில்லாமல் வாடுவது பொறுக்க முடியாதகொடுமையாகும். இந்த வித்தியாசங்கள் ஒழிய வேண்டும் என்று சுயமரியாதை இயக்கம் கூறுகிறது. இது நாஸ்திகமா?

கடவுள் என்று கண்மூடித்தனமாக நம்பிக்கொண்டு, கல்லுகளையும் மரக்கட்டைகளையும் வைத்துக்கொண்டு மக்கள் அறிவழிகின்றனர். அவைகளுக்காக, ஏழைகள், கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பொருளைச்செலவழித்து விட்டுச்சோற்றுக்குத்திண்டாடுகின்றனர். தங்கள் சுகாதாரக் குறைவினால் நேரும் வியாதிகளுக்குக்கூட வைத்தியம் செய்து கொள்ளாமல் இந்தப்பொம்மைகளை வேண்டிக்கொண்டு சாகின்றனர். இந்தக் கோயில்களும், இந்தக்கோயில்களில் உள்ள சாமிகளின் மேல் ஏழை மக்களுக்கு நம்பிக்கையும் இல்லாவிட்டால் அவர்கள் முன்னுக்கு வந்துவிடுவார்கள்; அவர்கள் செல்வம் வீணாகாது, என்று சுயமரியாதை இயக்கம் கூறுகிறது. இது நாஸ்திகமா?

நமது நாட்டில் எண்ணற்ற கோயில்கள் ஏராளமான சொத்துக்களையுடையதாக இருக்கின்றனவே, அவற்றால் என்ன பிரயோசனம்? மக்கள் அவைகளை நம்பித் தங்கள் பணங்களை வீண் செலவு செய்கிறார்கள். அந்தக்கோயில்களின் சொத்துக்களும் ஒரு சிறு கூட்டத்தார் வயிறு பிழைப்பதற்கே உபயோகமாகிறது. ஆகையால் அச்சொத்துக்களை ஜனங்களின் நன்மைக்காக—கல்விக்காக—வைத்தியத்திற்காக— சுகாதாரத்திற்காக செலவு செய்யவேண்டும். பயனற்ற கோயில்களும், ஒன்றும் உதவாத உற்சவங்களும் வேண்டாம் என்று சுயமரியாதை இயக்கம் கூறுகிறது. இது நாஸ்திகமா?

எண்ணற்ற மடாதிபதிகள், குருமார்கள், பாதிரிமார்கள், முல்லாக்கள், சமய வேஷங்கள் போட்டுக் கொண்டு பாமர மக்களை ஏமாற்றித் திரிகின்றார்கள். அவர்களால் ஜனசமூகத்திற்கு எள்ளத்தனையும் பிரயோஜனம் இல்லை. இவர்களாலேயே ஜனங்கள் அடிமைப்புத்தியுடையவர்களாகிறார்கள். ஆகையால் இக்கூட்டத்தார் வேண்டியதில்லை. இவர்களுக்குள்ளசொத்துக்களையெல்லாம் பறிமுதல் செய்து நாட்டின் நன்மைக்குச் செலவு செய்யுங்கள் என்று சுயமரியாதை இயக்கம் சொல்லுகிறது. இது நாஸ்திகமா?

"புண்ணியம் உண்டு" "மோட்சம் உண்டு" "செய்த பாவம் தொலையும்" என்ற மூட நம்பிக்கைகளுடன், சிறுநாள் என்றும், பெருநாள் என்றும் வைத்துக்கொண்டு, நாள் தோறும், வாரந்தோறும், மாதந்தோறும், வருஷந்தோறும் அர்த்தமற்ற பண்டிகைகளுக்காக வீண் செலவு செய்யவேண்டாம். பண்டிகைகளுக்குச் செலவுசெய்யும் பொருள்களைக் கல்விக்குச் செலவு செய்யுங்கள் என்று சுயமரியாதை இயக்கம் கூறுகிறது. இது நாஸ்திகமா?

திதி யென்றும், கல்யாணமென்றும், கருமாதியென்றும் சொல்லிக் கொண்டு அர்த்தமற்ற சடங்குகளில் வீணாகச் செலவு செய்யவேண்டாம் என்று சொல்லுவது நாஸ்திகமா?

ஆனால் இவைகளெல்லாம் வைதீகர்களுக்கு விரோதமாயிருப்பதனால் அவர்கள் இவ்வியக்கத்தாரை நாஸ்திகர் என்றுதான் கூறுவார்கள். இதற்காக ஜனங்கள் ஏமாறமாட்டார்கள் என்றேசொல்லுகிறோம். புத்தமதச்சீர்திருத்தமும், முஸ்லிம் மதச்சீர்திருத்தமுமே நாஸ்திக மாகக் காணப்பட்டு அவைகளை ஒடுக்கச் சூழ்ச்சிசெய்த வைதீகர்களுக்குச் சுயமரியாதை இயக்கம் நாஸ்திகமாகக் காணப்படுவது ஆச்சரியமல்ல. ஆகையால் நாஸ்திகம் என்ற பெயருக்கு அஞ்சவேண்டாம். கொள்கைகளையே கவனிப்போம், உண்மையில் ஏழைகள் துயரம் எதனால் ஒழியும்? என்றால் சீர்திருத்தம் ஒன்றினாலேயே ஒழியும்; அதாவது சுயமரியாதை இயக்கம்பலனளிப்பது ஒன்றினாலேயே ஒழியும் எபைதை உணர வேண்டுகிறோம்.

---

## குருமூர்த்திநாயுடு மரணம்.

### சேலத்தில் துக்கம்.

டாக்டர் வரதராஜலுவின் மாமனாரான வைத்தியம் குருமூர்த்திநாயுடு அவர்கள் தனது 98 வது வயதில் சேலத்தில் அவரது பங்களாவில் 18—7—32 தேதி காலமானார். ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் துக்கம் தெரிவிக்கும் பொருட்டு வந்திருந்தனர்.

---


## அபான வெடி அல்லது வாய்வு பேதி.

இதனை சாப்பிட்ட சில நேரத்திற்குள் தேகத்திலுள்ள தசவாயுவின் மிகுதியை அபானத்தின் வழியே போக்கிவிடும். சிலருக்கு 1 வேளை மருந்தில் 40—50 தடவை வரை காத்து பரிகிறது. வாதம், வாய்வு உபாதை உடனே தீரும். புட்டி 1க்கு ரூ. 1.

1. "தங்கரசம்" சகலவியாதிகளைப் போக்கும்; புட்டி 1க்கு ரூ. 1-0-0. 2. "St. ஜெவியர் சால்ட்" சுகபேதி சர்வரோக சங்காரி; புட்டி 1க்கு ரூ. 1-4-0. 3. "சந்தனாதித் தைலம்" நல்ல குளிர்ச்சியை தரவல்லது; புட்டி 1க்கு ரூ. 1-0-0. 4. "G. L. கல்நார் பற்பொடி" தந்த வியாதிகளுக்கு சஞ்சீவி; டஜன் 1க்கு ரூ. 1-8-0, பெரியது ரூ. 3-0-0.

கமிஷன் ஏஜெண்டுகள் தேவை. கியாட்லாக் இனாம்.

டாக்டர் ஜி. எல். சாமி,
வரகனேரி, திருச்சினாப்பள்ளி.

# "இலங்கையும், சுயமரியாதையும்"

[எம். ஆறுமுகம்]

இக்கட்டுரை வரையப்புகுந்தது ஒருவேளை இலங்கைவாழ் சுயமரியாதை வீரர்கள் என்மேல் சீற்றங்கொள்ளலாம். பொதுவாய், இலங்கைக்குத் தலைநகராய் விளங்கும் கொழும்புமா நகரை மட்டும் நான் கண்டு அறிந்த அளவில் சிறிது விளக்கி பொதுப்பட இலங்கையின் பல பாகங்களிலும் இக்கொள்கைகளைப் பின்பற்றும் ஏனைய சகோதரர்களையும் விளக்குவாம். சுயமரியாதையின் முற்போக்கையும், அது இந்தியாவின் ஜாதித்திமிரும், சமயப்பற்றுதலாலும் கட்டுண்டு கண்மூடி இருக்கும் தென் இந்தியாவாகிய தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் பேசப்படும் சமூகத்தவர்களுக்கு கடந்த ஏழாண்டுகளாக பத்திரிகை மூலமாகவும், மகாநாட்டு மூலமாகவும், மாகாண மகாநாட்டு மூலமாகவும் பாமர மக்கள் முதல் பகுத்தறிவாளர் ஈறாக ஓர் புத்துணர்ச்சியை யுண்டு பண்ணி, கடந்த 15 வருடகாலமாக தேசவிடுதலைக்காகப் பாடுபடும் காங்கிரஸ் முயற்சிகு எட்டாத ஓர் கிளர்ச்சியை உண்டுபண்ணிற்று, பண்ணுகிறது பண்ணவும் போகிறது என்பதை பகுத்தறிவாளர் நன்கு உணர்கிறார்களென்பது வெள்ளிடைமலை. இவ் இயக்கத்தின் காரணமாக எத்தனையோ சமூகத்தவர்கள் நாம் பேடிகளல்ல. நாமும் மனிதர்கள்தான் என்று உணரப்பெற்றிருக்கின்றார்கள் என்பதை விரிக்கிற் பெருகும்.

இக்கொள்கையானது கொழும்பு மாநகரின்கண் எவ்விதம் கையாளப்பட்டுவருகிறதென்றால் அது கடலில் உரைத்த காயம்போலும், மணலிற் கொட்டிய பாலைப்போலும்தான் இருக்கின்றது. ஆனால் கொழும்போ கல்வியறிவிலேயோ மேனாட்டு நாகரீகத்திலேயோ ஏனைய நாடுகளைப்போல ஒரு சிறிதும் பிற்போக்கானதல்ல. பொதுவாக குடியரசை வாசிக்கும் நண்பர்களும், குடியரசை இலங்கைக்கு அனுப்பும் குடியரசு மானேஜரவர்களுக்கும் நன்கு தெரியவரும். இன்னும் கொழும்பின்கண் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி அறியாதார் ஒரு சிலரே என்பது மிகையாகாது. என் இவற்றில் இறங்கி நானும் ஓர் சுயமரியாதை வீரன், கொள்கை இத்தன்மையது என்று வெளிவராததன் காரணம் காங்கிரசைப்போல தன்னுடைய ஜாதிப் பெருமையோ, சமய பெருமையோ வெளிக்குகாட்டமுடியாதபடி, தான் உயர்ந்த குலத்தோனாயினும், தாழ்ந்த குலத்தோனாயினும், தன்பெருமையை இழந்து ஏனைச் சுயமரியாதை வீரர்களைப்போன்று ஓர் சமசுதந்தர நிலைமையை அடைவது அகௌரவம் என்ற மேற்கோளினாலேயே என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது. இவற்றை எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். ஆயினும் குடியரசைப்படித்த உண்மைப் பகுத்தறிவாளர்கள் ஓர் புத்துணர்வுபெற்று அக்கொள்கையில் இறங்காவிட்டாலும், கொள்கையின் உயர்ந்த உன்னத பொருள் சுவையை உணர்ந்து தங்கள் பேர்களுக்குப் பின்னால் வரும் வால்களான, பிள்ளை, ரெட்டி, நாயுடு, நாயக்கர், செட்டியார், ஐயர் என்ற பட்டப்பெயர்களைக் களைந்தெறிந்தது போற்றற்குரியதே. இவற்றைக்களைந்தெறிந்த அறிவாளர்களுக்கு நமது நன்றியறிதலான வந்தனத்தைச் செலுத்துவதுகூட அன்னவர்கள் சுயமரியாதைச் சங்கங்களை ஸ்தாபித்து தமது முழு உள்ளக்கிடக்கைகளையும், பாமர மக்கட்களுக்கு எடுத்துக்கூறி இன்னும் தங்கள் முயற்சியால் சமூகசீர்திருத்த முறைகளைப் பகுத்தறிவால் விளக்கிக்காட்டுவார்களாமாயின் இன்னும் அன்னவர்களுக்கு அநேக நன்றியறிதலானவந்தனங்களைச்சமர்ப்பிக்க கொழும்பில் தோன்றிய சுயமரியாதைச் சங்கத்தார் சார்பாக நான் மிகத்தாழ்மையோடும் வேண்டிக்கொள்கின்றேன். சுயமரியாதைக் கொள்கையை அறியாத, உணரமுடியாத, சில கற்றறிமூடர்களும், பாமரமக்களும், மதம் போச்சு, ஜாதி போச்சு சமயம் போச்சு என்று ஓலமிடுவதைப் பார்க்கும்பொழுது அன்னவர்களுக்காக இரங்கவேண்டி இருக்கிறதே தவிர கோபிப்பதிலாவது குறை கூறுவதிலாவது ஏதுமில்லை.

கொழும்பின்கண் சுயமரியாதைச் சங்கம் தோன்றி கடந்த ஒன்றரை ஆண்டுகளாக சில பெரியார்கள் தலைமைவகிக்க அநேக அறிவாளர்களால் அநேக விஷயங்களைப் பற்றி சொற்பெருக்காற்றப் பெற்றது. சிறு கூட்டங்களும், பெரும் கூட்டங்களும் கூட்டப்பெற்றும் அநேக இடையூறுகளுக்கு முன்னால் வேலை செய்துகொண்டுவருகின்றது. ஆனால் பகுத்தறிவற்ற, உண்மைக் கல்விவாசனையறியாத, உண்மை மதப்பெருமை உணராத, சில வைதீகப்பேய்களும், சில குருட்டு நம்பிக்கையும் குறும்பு புத்தியுள்ள உன்மத்தர்களாலும் பற்பல இடையூறுகள் விளைந்தன வென்றால், இருபதாம் நூற்றாண்டு இளம் சிங்கங்களான சுயமரியாதை வீரர்கள் முன் அவர்கள் ஜம்பம் பலியாதென்பதே அறிவாளரின் உள்ளக்கிடக்கை.

கொழும்பு நகரை விட்டு சுற்றுப் பக்கங்களிலுள்ள சுயமரியாதை வீரர்கள் செய்துகொண்டுவரும் அரும்தொண்டுக்கு கொழும்பு சுயமரியாதைச் சங்கத்தார் என்றும் நன்றி செலுத்தக்கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

சுயமரியாதை இயக்கமானது ஒரு ஜாதிக்காகவோ, அல்லது ஒரு சமயத்திற்காகவோ, அல்லது ஒரு தேசத்திற்காகவோ பயன்பட வேண்டுமென்று எழுந்ததல்ல. உலகம் பூராகவும் அறிவிற்காகப் போராடப்படும் பொழுது அவ்வறிவின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் ஓர் இயக்கம் சுயநலங்கருதியா, அல்லது பிறநலங் கருதியா என்பதை அறிவாளர்கள் உணர்வார்களாக.

ஆதலால் விசேஷமாய்க் கொழும்பின் கண்வாழும் அறிஞர்கள், தங்களது ஆராய்ச்சி வன்மையால் பகுத்துணர்ந்து, இலங்கையில் வாழும் அறிவாளிகளான இந்தியர்கள் உண்மையும் ஒழுக்கமும் நிறைந்த கொள்கைகள் எவற்றில் மலிந்து பொலிந்து விளங்குகின்றனவோ அவற்றை நமது நலங்கருதி பார்த்த அளவில் விட்டுவிடாதபடி பிறர்க்கும் பிரயோஜனமுண்டாகும் பொருட்டு எடுத்துரைக்க முன்வருவீர்களாக. அம்மட்டுமல்ல, இலங்கை மாத்திரமல்ல ஏனையநாடுகளும் நமது பிரச்சினையைக் கைக்கொண்டு ஒழுகுவதற்கு நாம் உற்ற வழியாய் விளங்கவேண்டும்.

இலங்கையில் வாழும் சுயமரியாதை வீரர்களே, தலைவர்களே, சுயமரியாதையை ஆதரிக்கும் அன்பர்களே கட்டுரை வரையும் கனவான்களே, எழுமின் விழிமின். கடந்த 19 நூற்றாண்டுகளாக யாதொரு பிரயோஜனமின்றி கழித்தோம் கழித்தோம். இனிமேலாவது உரங்காதபடி உண்மையைக் கண்டடைய ஒரு மனப்பட்டு உழைப்போமாக.

---

[5ம் பக்கத்தொடர்ச்சி]

நாட்டினரின் யுத்த உணர்ச்சியைத் தூண்டிவிட்டு சீனர்களால் பெரிதும் கொண்டாடப்படுகிறார். அந்த அமிஜான்சனுக்கும், இந்த சீனப்பெண்மணிக்கும் இவ்வளவு அசாத்திய மனோபாவமும்' ஊக்கமும் ஏற்பட்டது எந்த கடவுளின் தவறுதலால்? என்னும் கேள்விக்கும் கடவுள்பக்தர்கள் விடையிறுத்தாக வேண்டும்.

ஆண்களைப்போல பெண்களுக்கும் தேகாப்பியாசம் கொடாமையும், அவர்கள் தங்கள்கையில் ஆயுதங்களைத் தொடவுங் கூடாதெனகட்டுப்பாடுசெய்து வைத்திருப்பதுவுமே இன்றைய இந்தியப்பெண்மணிகள் பலவீனர்களாயும், மனோதிடமற்ற கோழைகளாயும் இருப்பதற்குக்காரணம் என்று நாம் கூறினால் இதனை மறுப்பவர்யார்? இது ஸ்திரீகளின் மேல் ஆடவர்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எதேச்சாதிகாரம் எங்காளும் நிலைத்திருக்கச் செய்த சுயநல சூழ்ச்சியேயாகும் என்பதில் என்ன தடை? இவை நிற்க,

நாம்மேலே கூறியதில் செல்வவந்தனும், பலவானும் பெண்ணின் விருப்பத்திற்கு மாறாகவே தங்கள் இச்சையைப் பூர்த்தி செய்து கொள்ளஇடமிருக்கிறது என்பதை விளக்கினோம். இதில் அப்பெண்ணால் விரும்பப்பட்ட இளைஞன் துராக்கிருதம் செய்யும் அச்செல்வவானையோ அன்றிஅம் முரடனையோ நேருக்கு நேர் எதிர்த்து தன்உரிமையை நிலைநாட்டி தனது காதலியை அவரிடமிருந்து காப்பாற்ற முடிகிறதில்லை. இவன் நீதி ஸ்தலத்திற்குச் செல்லினும் செல்வம் படைத்தவன் தனது பணப்பையின் முடிச்சினைச் சற்று தளர்த்துவானானால், அவனுக்கநுகூலமாகச்சாமி களின்தலையிலடித்துப் பொய்ச்சாட்சியம் கூறபலர் கிடைப்பர், அதனால் கேசையும் ஜெயித்து விடுகிறான் அந்தமுதலாளி

அடுத்த பலவானோ! இத்தவம்புக்கொல்லாம் போகாமல் இவ்விளைஞனை எளிதில் தொலைத்து விடக்கூடும். இவ்விளைஞன் போதிய பலம் படைத்தவனாயும், தற்காப்பு ஆயுதம் கொண்டவனாயும் இருப்பானேல், அப்பலவானின் முரட்டுக் குணம் இவனை என்ன செய்யமாட்டும்? இந்த இளைஞன் ஏன் பலவானாயில்லையெனில், உரியகாலத்தில் சரியான தேகப்பயிற்சி இல்லாமையே காரணமாகும். ஒவ்வொரு மாணவனும் இவ்வளவு நேரம் ஒவ்வொரு நாளும் தேகப்பயிற்சி செய்தல் வேண்டுமென, அரசாங்க சட்டமிருந்து, ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இவ்வளவு வயதுவரையில் கண்டிப்பாக பாடசாலைக்குச் செல்லவேண்டுமென கட்டாய (இலவச) க்கல்விச்சட்டமும் ஏற்பட்டிருக்குமானால் இந்த இளைஞனும் அவசியம் போதிய பலமுடையவனாகவே இருப்பான். மேலும் தற்காப்பினிமித்தம் எல்லோரும் ஒரேவிதமான ஆயுதந்தரித்துக்கொள்ளவும் உரிமையிருக்கவேண்டும். இதனால் நாடு இரத்தக்களறியாகி விடுமெனச் சிலர் கூறுவார்.

ஆனால் அவ்வாறு கூறுவோர் இதனைஆழ்ந்து சிந்திப்பதுடன் நமது 'சமதர்மமுறை' சொலியினை முற்றும் கேட்பரேல் அவர்களது அவ்வபிப்பிராயம் மாறிவிடுமென்பது திண்ணம்.

உலகில் தாமாக விரும்பிய ஒரு ஸ்திரீயும் ஆடவனும் யாதொருதடையுமின்றி ஒன்றுசேர்ந்தின்புறவேண்டுமானால் இன்றைய உலகிலுள்ள பணக்கார "முதலாளி" "ஏழை" என்ற தன்மையும், மக்களில் சிலர் "பலவான்க"ளாயும் சிலர் "பலவீனர்க"ளாயும் ஆகும்வண்ணம் இடங்கொடுத்திருக்கும் தேகப்பயிற்சியின் மாறுபட்டதன்மையும் ஒழியவேண்டும். இதைப்பெறுவதெவ்வாறெனில்

(1) ஓர் ஆட்சியின் கீழுள்ள மக்களில் பணக்காரன் ஏழை என்ற நிலைமை இருத்தல் கூடாது. (2) நாட்டில் அரசாங்கத்தின் நேர்பார்வை

# மூலக்கொத்தளத்தில் ஆதிதிராவிடர் கூட்டம்.

## பிரபலஸ்தர்கள் சொற்பெருக்கு.

24-7-32 ஞாயிறன்று மாலை 6-மணிக்கு சென்னை மூலக்கொத்தளம் பெரியபாளையத்தம்மன் கோவிலுக்கெதிரில் இவ்வூர் வாசகசாலையின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் கூடியது. அதற்கு 'திராவிடன்' ஆசிரியர் தோழர் டி. வி. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். அக்கூட்டத்திற்கு ஏராளமான ஆதிதிராவிட மக்களும் மற்றும் பலரும் வந்திருந்தனர்.

தோழர் டி. வி சுப்பிரமணியம்

தமது தலைமைப் பேருரையை ஆற்றினர். அச்சொற்பொழிவின் சாரமாவது:—

எதன் பேரால் இக்கூட்டம் கூட்டப்பெற்றதோ அதனுடைய சேவையை நான் பாராட்டாமலிருக்க முடியவில்லை. இங்கு நிறுவப்பெற்றுள்ள சரஸ்வதி வாசகசாலை என்றதின் பெயரை இன்றுமுதல் சமதர்ம வாசகசாலையாக மாற்றியிருப்பதே உங்கள் எதிர்கால முன்னேற்றத்திற்குத் தக்க சான்ருய் மிளிர்கின்றது. இதுவே ஒற்றுமைக்கறிகுறியாக இருக்கிறது. நமது நாட்டில் பிறந்த பிள்ளைக்கும் வியாபாரத்திற்கும் வாசகசாலைக்கும் மற்றும் பல ஸ்தாபனங்களுக்கும் சாமியின் பேரை வைத்தே நாம் இந்த கதிக்கு வந்துவிட்டோம் இதில் ஏதேனும் அர்த்தமுளதாவெனக்கேட்கிறேன். இத்தகைய அர்த்தமர்ற அறிவற்ற முறையில் மூடப்பழக்க வழக்கங்கள் என்னும் பேய்வாய்ப்பட்டு நாம் ஒவ்வொரு காரியத்தையும் செய்து வருகின்ருேம். இத்தகைய பெயர்களை வைக்கின்றநாம் அந்த சாமிகளுடன் பழகுகின்ருேமா அவைகளை காண்கின்ருேமா? ஆகையால் இவ்வாசகசாலைக்குச் சமதர்ம வாசகசாலை என்று பெயரிடுவதே சாலப் பொருத்த முடையதாகும். சரஸ்வதி முதலிய சாமிகளின் பெயர்களை நாம் வைத்துக்கொண்டிருந்து ஏமாற்றமடைந்தது போதும். இனி அச்சாமிகளின் தயவு வேண்டாம். நமக்கு வேண்டுவது சமதர்ம கொள்கைகளே. இவைகளால்தான் நமது நாட்டின் அடிமைத்தளைகளையும். எங்கும் சமதர்ம ஒளியே கேட்கப் படவேண்டும். உயர்ஜாதி என்றழைத்துக்கொண்டிருக்கும் சுயநலச் சூதர்களால் நசுக்கப்பட்டும், தாழ்த்தப்பட்டும் பாழ்படுத்தப்பட்டிருக்கிற ஆதிதிராவிட அன்பர்களுக்கு உழைப்பது இச்சமதர்ம யியக்கமே. எனவே ஆதிதிராவிடர்களாகிய உங்கள் குறைபாடுகளுக்கு யிரங்கித்தொண்டாற்றும் கொள்கையுடையது சமதர்மமே இதனை மற்ருெரு மொழியில் சுயமரியாதை என்கிருேம்.

அ. பொன்னம்பலனர்.

எழுந்துப்பின்வருமாறு பேசினர்:-

தோழர்களே!

சரஸ்வதி வாசகசாலையை மாற்றிச் சமதர்ம வாசகசாலையாகச் செய்தது போற்றத்தக்கதாகும். இத்தகைய செயல்களே தற்சமயம்நமக்கு வேண்டுவது. தாழ்த்தப்பட்டார் என்ற சமூகம் தற்சமயம் எஜமான், ஆண்டான், பணக்காரன் என்ற மோசப் பெயர்களை வைத்துக்கொண்டே அவர்களிங்கனம் உங்கள் ரத்தத்தை உருஞ்சுகின்றனர். நீங்கள் யாரால் துன்பப்படுகின்றீர்களோ அவர்களே உங்களை முட்டாள்களாக ஆக்கிவிட்டனர். உங்களுக்குக் கொடுமைகள் வருகின்றகாலத்தில் நீங்கள் நின்று தைரியமாகப் போராடவேண்டும். நீங்கள் தாழ்த்தப்பட்டார்கள் அல்லவென்று வாதிடவேண்டும். புண்ணியத்திற்கேற்றவாறு நாம் பிறப்பிக்கப்பட்டிருக்கிருேம் என்று இன்னும் நினைக்கின்றனர். அதற்கு மீறினல் நரகம் வந்து சேரும் என்றுங் கருதுகின்றனர். இங்ஙனம் தாம் தாழ்த்தப்பட்டவனகவே இருக்க நினைக்கிருன். உண்மையாக நாம் தாழ்த்தப்பட்டவர்களா என்று நினைக்கவேண்டும். எங்தெந்த வகையில் சீர்கேடுற்று கிடக்கின்ருேமென்ற நிலைமை உணர்ந்து அதைப்பற்றி ஆராயவேண்டும்".

### மதக்கொடுமை.

உங்கள் மக்களை வைத்தியசாலைகளில் போதிய வசதிகளுடன் நடத்துகின்றனரா? பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட மக்களை வாசிக்க அனுமதிக்கின்றனரா? ஆலயங்களில் உங்களை ஏன் விடப்படுவதில்லை? பொதுச்சத்திரங்களில் உங்களுக்கு இடமளிக்கப்படுகின்றதா? குடி தண்ணீர் நிலைகளில் நீங்கள் ஜலமெடுக்க விடுகின்றனரா? என இத்தகைய வினக்களை ஓர் ஆதிதிராவிட மகனைக்கேட்டால் என் செய்வது அதுஎன் தலைவிதியாகும். நான் எனது கர்மத்தால் அங்ஙனம் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றேன் எனக்கூறுகின்ருன். தானே அங்ஙனமிருப்பது ஞாயமெனஒப்புக்கொள்வதற்குக் காரணம் அவனைப்பிடித்திருக்கும் மதமேயாகும். இப்பாழும் மதமே இவனை இங்ஙனம் செய்துவிட்டது. அவர்கள் உயர்ந்தவர்கள், நாம் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணமே உங்களிடை நில்லாதிருக்கவேண்டும். ஆலயங்களில் பாடசாலைகளில், சத்திரங்களில், குளங்களில் தெருக்களில் நீங்கள் சென்ருல் தீட்டுப்பட்டுவிட்டதென்று கூறும் ஜாதி ஹிந்துக்கள் அதேவிடங்களில் கழுதை, நாய், பன்றி முதலிய இழிஜந்துக்கள் செல்வதைப்பற்றி கவனிக்கின்ருர்களா? இதனல் அவர்கள் உங்களைக்கழுதையினும், நாயினும், பன்றியினும் மலத்தினும் இழிவாகவே மதிக்கின்ருர்களென்பதை நீங்கள் உணர வேண்டாமா? உயர்ஜாதி என அழைத்துக்கொண்டிருக்கும் திமிர் ஆணவம் முதலியன பிடித்துக்கொண்டிருக்கும் சுயநலவாதிகளால் நீங்கள் படுங் கொடுமைகள் சொல்லி முடியா; எழுத முடியா பித்தளைக்குடம் எடுத்துப்போவதையும், தங்க நகைகள் அணிந்திருப்பதையும் வெள்ளை வேஷ்டி உடுத்திருப்பதையும் பார்த்து மனம் பொருதடித்துக்கொள்ளையிடுகின்ற கயவர்களின் கொடுஞ்செயலுக்கு யார்தான் மனமிரங்காதிருக்க முடியும்.

சமீபத்தில் தேவகோட்டைப் பக்கத்திலுள்ள நாட்டார்கள் என்னும் கள்ளர் ஆதிதிராவிட மக்களுக்கிழைக்கும் துன்பங்களைப்பற்றி நீங்கள் நம் பத்திரிகை வாயிலாய் அறிந்திருக்கக்கூடும் இங்ஙனம் செய்வதற்குக் காரணம் இரண்டு. தற்காலப்பஞ்ச நிலை ஒன்று. ஆடம்பரமாக இருப்பது இரண்டாவதாகும். இக்கொடுமைகளைப்பற்றிச் சர்க்காருக்குத் தெரிவித்திருந்தும் நாளதுவரையில் தகவலில்லை. இடயிலுள்ள பார்ப்பன உத்தியோகஸ்தர் சூட்சிகளாலே தாழ்த்தப்பட்டார் மனுக்கள்குப்பைத் தொட்டிகளிற் போடும் நிலைமை வந்துவிட்டது. இத்தகையக் கொடுமைகள் எழுவங்கோட்டை, சிக்கல், திருச்சி ஜில்லா, தொண்டைமான் பட்டி முதலிய பல விடங்களில் நடைபெற்றிருக்கின்றன. இதற்குக்காரணம் யாதென ஊன்றிப் பார்க்கின் உயர் ஜாதி என்ற கர்வம் பிடித்த ஹிந்துக்களின் தூண்டுதலேயாகும். தாழ்த்தப்பட்டார் இழிவுடையவர்கள் என்று உங்களில் சிலரே ஒப்புக்கொள்கின்றனர் எவ்விதத்திலும், எக்காலத்திலும் எவ்விடத்தும் நீங்கள் தாழ்ந்தவர்களல்ல என்ற உணர்ச்சியிருத்தல் வேண்டும் இதற்குச் சுயமரியாதை வேண்டும். பார்ப்பனர் உயர்ந்தவர் நீங்கள் தாழ்ந்தவர் என்றபாகுபாடும், உன் மதம் தாழ்ந்தது என் மதம் உயர்ந்தது என்ற வித்தியாசமும் முதலில்களையப்படல்வேண்டும். இதற்குச் சுயமரியாதைச்சுடரே துணை சொல்வதாகும். தற்சமயம் நாட்டில் ஆதிதிராவிட மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் துன்பங்களுக்கு இதுவே அடிப்படையான காரணம். மதம் ஜாதி என்ற பெருந்தளைகளால் நீங்கள் பிணைக்கப்பட்டுகிடக்கின்றீர்கள்

### கல்வியின் அவசியம்.

கோயில், மண்டபம், பூசாரி, கல்சாமி, மானிய முதலியன எவ்வளவு அவசியமென கருதுகின்றீர்களோ அதைவிட கல்வி அறிவு முதலியவை அதிக அவசியமானவை எனக்கருத வேண்டும். கோயில்களுக்கும், பூசைகளுக்கும் செலவிடும் பணத்தைக் கொண்டு கல்விச்சாலைகள் வாசகசாலைகள் நிறுவவேண்டும் ஓர் சமூகம் முன்னேறுவதற்குக் காரணம் கல்வியே. தற்சமயம் நம்நாட்டிற்கு வேண்டுவது இதுவேயாம்.

பின்னர் தோழர்களான திருஞானசம்பந்தமும், காந்த லிங்கமும் முறையே கட்குடியின் தீமையைப்பற்றியும், சுயமரியாதை இயக்கம் ஒடுக்கப்பட்ட மக்களை முன்னேற்றுவான் வேண்டி எத்தகைய அரும்பாடுபட்டு வருகிறதென்பதையும் குறிப்பிட்டனர். திருமதி குஞ்சிதம் பி. ஏ., எல். டி., பேசுகையில் தீண்டப்படாதவர் விஷயத்திலும், பெண் மக்கள் விஷயத்திலும் சமதர்மமோ, நியாயமோ வழங்காதிருப்பது வருந்தத்தக்கதென்றும் வைதீகர்களையும், வருணச்சிரமிகளையும் இது விஷயத்தில் வன்மையாய்க் கண்டிக்கவேண்டுமென்றும் பெண்மக்களைச் சாஸ்வத அடிமைகளாயும், பிள்ளைபெறும் இயந்திரங்களாயும், வேலையாட்களாயும் மதித்து நடத்திவரும்வரை, அவர்களுக்குச் சம அந்தஸ்தும், சம உரிமையும் அளிக்கப்படாதவரை, சொத்துரிமை வழங்கப்படாதவரை எவ்வகை முனனேற்றமும் எக்காலத்தும் சாத்தியமாகாதென்பதை தெள்ளத்தெளிய விளக்கினர். பின்னர் தோழர் குருசாமி அவர்கள் மூடபழக்கவழக்கங்கள் அடியோடு ஒழியதேண்டுமென்றும் எடுத்ததற்கெல்லாம் "விதி" விதி என்றுசொல்லி நம்மக்கள் சோம்பேறிகளாய், அறிவிலிகளாய் போய் விடாது தடுக்கப்படவேண்டுமென்றும், இதற்கு கல்வி அவசியம் என்றும் குறிப்பிட்டார். பின் திரு. நாகை காளியப்பன் அவர்கள் பேசிய பின் தலைவர் முகவுரையுடன் கூட்டம் இரவு 8 மணிக்குக் கலைந்தது.

---

யில் நடைபெற்று நாட்டின் ஒவ்வொரு வாலிபனும் ஒவ்வொரு ஸ்திரீயும் கட்டாயமாகப்பெறும் வண்ணம் தேகப்பயிற்சியை பரப்பவேண்டும். (3) இதைத்தவிர தனிப்பட்ட சிலர் கூடி, குஸ்தி, குத்துச்சண்டை முதலிய ஸ்தாபனங்கள் ஏற்படுத்துவது கூடாதென்பதும் சட்டமாயிருத்தல் வேண்டும்.

இவ்வாருயின் நாம் முன்னேகூறியது போன்று ஒருமனப்பட்ட ஆணையும், பெண்ணையும் பிரிக்க இங்கு முதலாளித்துவமாவது, முரட்டுத்தனமாவது இடம்பெருது போவது காண்க. இப்பொழுது கருத்தொருமித்தகாதலர்களிடையில் எவ்வகை "தடுப்புத்திறை"யும் இல்லாதொழிகிறது, அப்பொழுதுதான் "பொது உடைமையாகிய அழகு"ம் அதன் இன்பமும் தற்காலத்தைப்போன்று செல்வத்தாலும் முரட்டுத்தனத்தாலும் "தனி உடைமை"யாக ஆக்கப்பட்டிருப்பது ஒழியும். இயற்கை நியதியும் இதுவேயாகும்.

## "என்று தொலையும் எங்கள் துன்பம்"

### தாழ்ந்த ஜாதியார் கோரிக்கை.

### ராஜப்பிரதிநிதிக்கு மனு.

ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிடர்கள் சங்கத்தார், தீண்டாதாருக்கு இதர ஜாதிகள் செய்யும் கொடுமைகளைப்பற்றி வைசிராய்க்கு மனுச் செய்திருக்கிறார்கள். திருவாடானை, திருப்பத்தூர், சிவகங்கை, தேவகோட்டை முதலிய தாலூக்காக்களிலுள்ள கள்ளர், மறவர், அம்பலகாரர், சேர்வைகாரர் முதலிய ஜாதியார்களும், சில கிராமங்களிலுள்ள கிராம அதிகாரிகளும் தீண்டாதாருக்கு இழைத்துவரும் இன்னல்களைப்பற்றி அம்மனுவில் குறிப்பிட்டிருப்பதாவது:—

ஆதிதிராவிட பெண்கள், விதவைகளைப்போல வெள்ளைச்சேலையே கட்டிக்கொள்ளவேண்டும்.

அவர்கள் ரவிக்கை முதலிய சட்டை அணியக்கூடாது. பொதுவாக அவர்கள் தங்கள் தேகத்தின் மேல் பாகத்தை துணியால் மறைத்துக் கொள்ளக் கூடாது.

அவர்கள் குங்குமம் சந்தனப்பொட்டு வைத்துக்கொள்ளக் கூடாது. அவர்கள் தலைவாரி பூ முடித்துக் கொள்ளக்கூடாது. அன்றி தங்க ஆபரணங்களும் அணியக்கூடாதெனத்தடுத்து வருகிறார்கள்.

ஆதிதிராவிட ஆடவர்கள் சொக்காய் சட்டைமுதலியன போடக் கூடாது. அவர்களும் தங்கள் தேகத்தின்மேல் பாகத்தை துணியால் மறைத்துக்கொள்ளக்கூடாது.

ஆண்கள் முழங்காலுக்குக் கீழ் வேஷ்டி அணிந்து கொள்ளக்கூடாது அவர்கள் மழையிலும் வெயிலிலும் குடை பிடித்துக்கொள்ள அனுமதிக்கின்றார்களில்லை. அன்றி காலில் செருப்பு போட்டுக்கொள்ளக்கூடாதென நிர்ப்பந்தித்து வருகிறார்கள்.

உயர்ந்த வகுப்பினர்களெனச் சொல்லிக்கொள்ளுபவர்கள், தாழ்ந்தவகுப்பினரான எங்களை இம்சித்து அவர்களுக்கும், எங்களுக்கும் பேதமிருக்க வேண்டியது அவசியமெனவும், அவ்வித வித்தியாசத்தை உணர்ந்த மேற்கூறிய விதிகளை ஆதிதிராவிடர் கட்டாயம் அனுசரித்துவர வேண்டுமென விசேஷமாக கள்ளர் ஜாதியினர் வற்புறுத்தி வருகிறார்கள்.

லார்டு இர்வின் காலத்தில் இவ்வித கொடுமைகளைப்போக்குவதற்கு ஏற்பட்ட உத்திரவை மீறி நடந்துவருவதோடு தீண்டாதார்களை கிராமங்களிலிருந்து வெருட்டி அவர்கள் நிலங்களையும், வீடுகளையும் பறிமுதல் செய்திருக்கிறார்கள்.

ஆதிதிராவிடர்களை இவ்விதம் இம்சித்து இன்னல் செய்யாமலிருக்கத் தக்க முறைகளைக் கைக்கொள்ளும்படி "தீண்டாதாரா"கிய நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம்.

---


விற்பனைக்குத்தயார். முந்துங்கள். விற்பனைக்குத்தயார்.

தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,

அவர்கள் எழுதிய

# "கடவுளும் பிரபஞ்சமும்"

ஒன்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சுவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதீக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர் சிறந்த நூல். பகுத்தறிவு வளர்ச்சியும், உலக முற்போக்குமடைந்துள்ள இதுகாலை, அஞ்ஞானத்திலும், மூடபக்தியிலும் கிடந்துழலும் நம் மக்கள் அவசியம் படித்துப் பயன்பெறவேண்டுமென்றே கூறுவோம். "கடவுள்" என்னும் வார்த்தை வெறும் சொல் மயக்கே யொழிய வேறில்லை என்பதையும், புராணக்காரர்கள் கடவுளைக் கற்பித்திருக்கும் பொய்புரைகளையும், தத்துவ நூலாசிரியர்கள் கடவுளைப்பற்றிக் கூறும் கற்பனைகளையும் விஞ்ஞான முகத்தால் ஆராய்ந்து, அவைகள் யாவும் கற்பனைகள் என்பதைத் தெள்ளிதில் விள்க்கப்பட்டுளது. "கோழி முதலில் உண்டானதா முட்டை முதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

சுமார் 80 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்.

மானேஜர்,

குடி அரசு புக்டிபோ, ஈரோடு.

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

லைதத் திரும்பிப் பார்க்கப்படாதென்ற பழக்கமும் இந்த ஆன்ம சித்தாந்தத்திலிருந்து ஏற்பட்டதாகும். கொள்ளி வைத்தவர்கள் முகம், செத்தவனுடைய ஆன்மாவுக்குத் தெரியுமாதலால், வீட்டுக்கு அவர்கள் திரும்புங்காலே, அவர்கள் எரியும் பிணத்தை திரும்பிப் பார்க்கும் பட்சத்தில், வேகும் பிணத்தருகே அலைந்துக்கொண்டிருக்கும் அதன் "ஆன்மப்பேய்" (The soul Hovering near the burning corpse) அவர்களுடன் தொத்திக்கொண்டு, வீட்டுக்கு வரும் என்ற கற்பித பயத்தால் நேர்ந்த பழக்கமென அறிக.

வீட்டுக்கு அருகே வந்தபோதும், வீட்டில் நுழைவதற்கு முந்தியும், கால்களைக் கழுவிக்கொண்டு உள்நுழையவேணடுமென்ற பழக்கமும், இந்த ஆன்ம சித்தாந்தத்தை தழுவி நிற்கின்றதென்றும் அறியவும். எப்படியெனில், பேய், பிசாசுகள், தண்ணீரைத் தாண்டாவாம்! இதே காரணத்தை ஒட்டியே தற்கால பிராமணர்கள், தாங்கள் சாப்பிடுங்காலே, இலையைச் சுற்றி ஜலம் தெளித்துக்கொண்டு, சாப்பிடுவதுமுண்டு. ஜலத்தைத்தாண்டிக்கொண்டு பேய், பூதங்கள் உண்ணும் உணவை உண்ணுவாம்!!

விடியற் காலங்களில் சாணித்தண்ணீரை வீட்டுக்கு எதிரில் தெளிப்பதும் இதே காரணத்தினால் என அறிக. பாதி ராத்திரி முதல் கதவு சாத்தப்பட்டு நுழையவழியில்லாமல் வெளியில் இருந்த பேய், பிசாசுகள் கதவைத் திறந்தவுடன் உள்நுழையாதிருக்க சாணித்தண்ணீர் தெளிக்கும் வழக்கம் உண்டாயிருக்க வேண்டும். சாப்பிடும் போது, விளக்கு அவிந்துவிட்டால், உண்ணும் உணவை எடுத்து விட்டு, தீப மிட்டபிறகு தண்ணீரைத்தெளித்தும், தனது தலைமேல் தண்ணீரைத் தெளித்துக்கொண்டும் திரும்ப உண்ணுவது சில இடங்களில் பார்க்கலாம். இதுவும், இந்த பேய் கற்பிதத்தால், பழக்கத்திற்கு வந்திருக்கவேண்டும். இருட்டில் தான் பேய் பிசாசுகள் உணவை உண்ணுமாம்! விளக்கு அவிந்தவுடன் பேய் பிசாசுகளால் உண்ணும் உணவு, தீட்டுப்பட்டு விட்டபடியால் மறுபடியும் அந்த உணவைத் தீண்டத்தகாதெனவும், விளக்கு ஏற்றியவுடன், பேய் பிசாசுகள் ஓடிவிடுமாகையால், அப்போது புதிய உணவை உண்ணலாமென்பது ஓர் குயுக்தி என எண்ணவேண்டி வருகிறது.

இவ்வித மூடப்பழக்கங்களுக்கெல்லாம், மனிதன் இறந்த பிறகு அவன் "ஆன்ம" வெளியில் உலாவுகின்றது என்ற கற்பிதத்தால் வந்தவை. மனிதனுக்குள் ஓர் "ஆன்மா" இருந்து வருகிறது. அந்த "ஆன்மா" பெருவிரல் பருமனுள்ளது. தேகம் மரித்த பின்பு, அந்த "ஆன்மா" செத்தவன் வீட்டுப்பக்கங்களிலும், அடுத்த செடிகளிலும், சுடுகாடுகளிலும் தங்கியிருக்கும் இந்த ஆன்மாக்கள் தான், "பேய்" "பிசாசு"களாக மனித சஞ்சாரமில்லாத இடங்களில்உலாவிக்கொண்டிருக்கும். இருளிலோ, அல்லது "உருமவேளை"யிலோ (மத்தியானம்) "ஒண்டி சண்டியாக" (தனிமையாக) யாதாமொருவன்தனித்த இடங்களில் போவானேயாகில், அவனை இந்தப்பேய், பிசாசு, அண்ணமார், தம்பிமார், கன்னிமார், முனிஸ்வரன் முதலிய "பூதப்பேய் பிசாசுகள், இவனை "அறைந்து" நோயால் பாதைப்படும்படி செய்து விடுகின்றனவாம். இந்த நம்பிக்கை தான் உலக முழுமையும் நிறைந்து வருகின்றது. பேய்களுக்கும், பிசாசுகளுக்கும், முனிவீரன்களுக்கும், காற்று கருப்பன்களுக்கும், இந்த "ஆன்மா" கற்பிதமே, காரணமாகும். ஆன்மா ஒன்றுண்டென்ற நம்பிக்கை கற்பிதமென்று நமது பாமர மக்கள், உணர்வார்களேயாகில், இந்தக் கற்பிதப்பேய் பிசாசுகள் உலகை விட்டுப் பரந்தோடிப்போமென அறிக.

இந்த பேய் பிசாசு நம்பிக்கையால் உலகில் அநந்த கொடுமைகள் நடந்து வருகின்றன. ஒரு காலத்தில் சூன்யம் வைத்தல் (Nicromancy or Black Magic) என்ற பொய் வதந்தியை நம்பி, அநேகர் கொல்லப்பட்டார்கள். அந்த "சூன்யத்தை"ப் போக்க, தலைச்சன் குழந்தைகளை [First Born] காவு கொடுத்தார்கள்!!! இக்கொடிய பாதகத்தால், ஆயிரக்கணக்கான உயிர்கள் மாய்ந்தன. ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டன. ஆயிரக்கணக்கான கிழவிகள் "மந்தரக்காரி" என்றும் சூன்யக்காரி" என்றும் வதைத்துக்கொன்றார்கள். ஆயிரம் வருஷங்களாக, ஐரோப்பா தேசத்தில், (witchcraft) என்று வழங்கி வந்த சூன்யம் என்ற பழக்க வார்த்தையால், கொல்லப்பட்ட, (wizards, witches) சூன்யக்காரன், சூன்யக்காரிகளுக்கு, கணக்கு வழக்கேயில்லை!!! இம்மகாபாதகத்திற்கு, அடிமையாகயிருந்தது "ஆன்மா" என்ற ஓர் கற்பித சோல்லென அறிக. இந்த கற்பித சொல்லுக்கே, நரக மோட்சங்களும், நிர்வாண சமாதிகளும், திதி, திவசங்களும், கோயில்களும், குளங்களும், மசூதிகளும் மாதா கோயில்களும், திருவிழாக்களும், தீர்த்தங்களும், பெரிய புராணங்களும், கந்தபுராணங்களும், வேதங்களும், வேதாந்தங்களும் தோன்றிவுள்ளன. இந்த சோல் ஒன்றை மாத்திரம், கற்பிதமென அறிந்த மாத்திரத்தில், எல்லா பேய், பிசாசுகளும், இருளன், வீரன் காட்டேரிகளும், சிவன், விஷ்ணு, பிரமாக்களும், 33 கோடி தேவர்களும், 48000 ரிஷிகளும், இவைகளுக்கு கட்டியுள்ள கோயில், மசூதிகளும், விசாரங்களும் (viharas) புத்தர் கோயில்களும், சிவன் கோயில்களும் பரந்தோடிப்போமென அறிக. இதற்கு அத்தாட்சி வேண்டுமானால், இந்த கற்பித வார்த்தையை அறியாத குழந்தைகளுக்கும், மனிதர்களுக்கும் "கடவுள்" என்ற கற்பிதச் சொல்லே தெரியா! பேய் பிசாசுகளும் தெரியா. இந்தச்சொல்லை, கற்பிதச் சொல்லென அறிந்த விஞ்ஞானிகள், "கடவுளும்" கற்பிதச் சொல்லென்றே தீர்மானித்து வருகின்றார். மனிதருக்குள் சொற்கள் [Words] பரிணமித்து [Evolve] வருங்காலையில்' "ஆன்மா" "உயிர்" "பிராணன்" என்ற சொற்கள் முதல் தோன்றின. அந்த சொற்களிலிருந்து, "பேரான்மா" "பேருயிர்" என்ற சொற்கள் பெறப்பட்டன. இந்த சொற்களை கடவுளென்ற பதத்திற்கு சாட்டி, "மனிதன்" சிற்றுயிர் என்றும், "கடவுள்" பேருயிரென்று வழங்கிவந்தன. இது தான் கடவுளென்ற பதத்தின் பரிணமம் [Evolution] ஆதி மனிதனுக்கு "ஆன்மாவும்" தெரியாது. "கடவுளும்" தெரியாது. பேச ஆரம்பித்தபிறகே, இந்த சொற்கள் கற்பிக்கப்பட்டன. ஆன்மாவுக்கும், கடவுளுக்கும், பாஷையே ஆதாரம். பாஷை தோன்றாவிடில், எந்த மனிதனும் "ஆன்மா"வென்றும் "கடவுளெ"ன்றும் சிந்தித்து இருக்கவேமாட்டான். எந்த மிருகத்திற்காகிலும், ஆன்மாவென்றாகிலும் கடவுளென்றாகிலும் தோன்றினவா? இல்லை. ஏன்? அவைகளுக்கு பாஷை (Language) தோன்றாமையால். ஆதலின் "கடவுள்" "ஆன்மா" "பேய்" "பிசாசு" முதலிய இன்னும் பல கற்பித கொள்கைகளுக்கு பாஷையே ஆதாரம். இந்த ஆதாரத்தை மறுமுறையில் விபரமாக விளக்குவாம்.

## அலமேலு— கணபதி திருமணம்.

சென்ற 28—7—32 வியாழக்கிழமை காலை 10-30 மணிக்கு காருகுடி சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் அங்கத்தினரில் ஒரு வரும், பிரபல வியாபாரியுமான தோழர் கணபதி அவர்களுக்கும், முசிறிதாலூகா, போருப்பட்டி மதுரை செட்டியார் குமாரத்தி திருமதி அலமேலு அம்மாள் அவர்களுக்கும் அவசியமற்ற மூடச் சடங்குகள் பல வற்றையும் அறவே ஒழித்து சுயமரியாதை முறைப்படி திருமணம் நடைபெற்றது. இத்திருமணத்திற்கு இந்நகர் சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் தலைவர் தோழர் பழமலை அவர்களும், ஷை சங்கக்காரியதரிசியான, தோழர்களான பி. டி. செட்டியார், பி. சங்கபிள்ளை, எம். அழகப்பன், எம். சங்கபிள்ளை, கே. ராமசாமி. முதலானோர்களும் விஜயம் செய்திருந்தனர்,

(ஒரு நிருபர்,)

## அடியக்கமங்கலம்.

றபீகுல் இஸ்லாம் சோசைட்டி:-

இச்சொசைட்டியின் தலைவர்ஜனுப் செ. ம. மு. அப்துல்மஜீது அவர்களும், ஜனுப்கள், வா. அ. அ. முகம்மது இப்ருஹீம், ந. அ. முகம்மது நத்தர், கு. இ. முகம்மதுகாசீம் ஆகிய நான்கு கனவான்களும் இவ்வூர் பஞ்சாயத்து கோர்ட்டில் மெம்பர்களாக நியமனம் செய்மப்பட்டிருப்பதை பாராட்டுவான் வேண்டி 2-8-32ல் ஆலி ஜனுப், பு. கா. ஜா. முகம்மது காசீம் ராவுத்தர் அவர்களது அக்கிராசனத்தில் "றபீக் ஹாலில்" பொதுக்கூட்டமொன்று கூடிய போது மேற்படி பஞ்சாயத்து மெம்பர்கட்கு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டு, பூமாலைகள் சூட்டியபின், ஜனுப்கள் செ. அ. அப்துல்றெஜாக், எஸ். புருஹானுத்தீன் இவர்களால் "நமது கடமை" என்பதுபற்றி பிரசங்கம் செய்தபின் 'டீபார்டி' சப்ளையுடன் கூட்டம் கலைந்தது. ஒரு நிருபர்.

## கூட்டம்.

13—8—32-ந் தேதி சனிக்கிழமை கோலார் தங்கவயல் மாரிகுப்பம் தென்னிந்திய பௌத்த சங்க சபா மண்டபத்தில் உயர்திரு. ஜி. அப்பாதுரையார் அக்கிராசனத்தின்கீழ் 5-மணிக்குமேல் பிரசங்கம் நடைபெறும்.

## காருகுடி சுயமரியாதை வாலிபர் சங்கம்.

சென்ற 30—7—32 சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு ஷை சங்கத்தினர் மாதாந்திரக்கூட்டம் ஆரம்பமாயிற்று. வழக்கப்படி எல்லா நடவடிக்கைகளும் நடைபெற்றது. பின்னர் சில முக்கிய தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

(ஒரு நிருபர்.)

## "பெண் தேவை"

கம்மாளர் வகுப்பைச்சேர்ந்தவரும் 28-வயதுடையவரும், மாதம் சராசரி 30 ரூ. சம்பாதிப்பவரும், தச்சுவேலை (மரவேலை) செய்பவரும் பூஸ்திதி இல்லாதவரும், இதுகாறும் மணம் புரியாதவருமான வரனுக்கு 18-முதல் 20, 22 வயதுவரையுள்ளவரும் எச்சாதியாயினும், நாகரீக தோற்றத்தோடு சிறு கல்வி பயின்ற ஒரு பெண் தேவை. விதவையாயிருப்பின் மிக்கநலம். ஒருமாதத்திற்குள் செய்தி தெரிவிக்கவேண்டும்.

செய்தி அரிய விரும்புவோர் கீழ் காணும் விலாசத்திற்கு வரையவும்.

காரியதரிசி
தேச ஊழியர் சங்கம்,
பொரையார் ரோடு, காரைக்கால்.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 5. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 6. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| 7. | மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. | 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

ஈரோடு.

---

## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

### 'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருட சந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

### முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

### "சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.

ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருட சந்தா உள்நாடு 1—0—0.
,, வெளிநாடு 1—8—0.
மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
230-30வது வீதி ரெங்கூன்.

---

### சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலு பி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

---

## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

---

பண்டிதர். உயர் திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

### மாதர் சுதந்திரம் அல்லது

## பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

---

## Goshaye office pillss.

### கோஷாயி ஆபீஸ் மாத்திரை



உதவி டாக்டர்
Dr. T. K. V Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—; 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு.

டாக்டர் B. A. எதிராஜ்,
(காலரா பைரி) கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

---

### "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யூம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

### "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.
இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம், மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாற்றுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.
இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.
இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் மூச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.
இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.